


சிற்றிதழ் - 11
ஏப்ரல் - டிசம்பர் 2023
ISSN 2806-5123

# முத்திதழ்

MUTHTHITHAL

நீ. நான்.. நாம்...

முதுசத் தொகுப்பு

காலாண்டிதழ்
விலை : 300/-




## நம்மட படைப்புகள் கண்காட்சி

## பரீட்சை பெறுபேறும் பகுப்பாய்வும்

## புலமைபரிசில் பரீட்சையில் வலயமட்ட சாதனை

## நூற்றாண்டு காணும் மூதூர் மத்திய கல்லூரி






# Muththithal Mutur

காலாண்டு சிற்றிதழ்

முத்திதழ்

MUTHTHITHAL

நீ. நான்.. நாம்...

முதுசத் தொகுப்பு

MUTUR JMI PVT LTD
jmi MUTUR
SINCE 2016

0717891887 | 0262238593
Muththithal Mutur
muturjm@gmail.com
Bazar Mosque Road Mutur


# S.G.M.K

Grade C4 Contractros

Civil Construction & Supply of Building Materials

B.S.R.Reg No:918 / ICTAD Reg No: 10878







GOVERNMENT CONSTRUCTION
PRIVATE CONSTRUCTOR
NGO / INGO COMMITMENT

S.Santhuru
Managing Director
CONTACT US:
(+94) 773397953

## Why Choose Us?

*Construction covers the processes involved in delivering buildings, infrastructure, industrial facilities, and associated activities to the end of their lives.*

## Our Services

- Renovation
- Building Construction
- House & Apartment Construction
- Interior Design & Drawing
- Road, Infrastructure Contract

Urikkadu, Velvettiththurai, Jaffna
Church Road, Mutur, Trincomalee
www.sgmksite.com
s_santhuru@yahoo.com



ARHAM CATERING

# ARHAM CATERING SERVICES

Indulge in our Signature Catering Services

Services Offered
- Family Gathering
- Office Meeting
- Wedding Party
- Birthday Party
- Festival Celebration

FULL SAWAN
4900 LKR PER PACKS

HALF SAWAN
2950 LKR PER PACKS

Sawan Including
- Basmathi Fried Rice
- Fried Chicken
- Fried Eggs
- Beef Curry
- Mix Fruit Jam
- Salad
- Maldive Fish Sambol

ORDER NOW
077 359 0270





அழையுங்கள்

வெளிநாடு செல்வதற்கான சகல ஆவணங்களும் செய்து தரப்படும்





பாஸ்போர்ட்
ஒன்லைன் புக்கிங்
வீட்டிலிருந்தே பெற்றுக் கொள்ளலாம்.
ஒரு பாஸ்போர்ட் எடுப்பதற்கு தேவையான முதல் ஆவணம் - BC /IC

01 Day ▸ 15 Day ▸ 45 Day ▸ 60 Day
Apply Now!

MP NEWS
Tel: - 0752221027 / 0772508825
What Sapp: - 0761531213 Fax: - 0262238205
E-mail: - mpnewsmutur@gmail.com
076 153 12 13
People service to solve your doubts with us

பஸ் சீட் புக்கிங்
Online Seat Reservation
பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்
பயணத்தின் போது ஏற்படும் அசௌகரியங்களிலிருந்து விடுபடலாம்

மூதூரிலிருந்து இலங்கையின் எப்பாகங்களுக்குமான ஒன்லைன் ஆசன முன்பதிவு

மூதூர் - கொழும்பு
கொழும்பு - மூதூர்




MUTHTHITHAL முத்திதழ்

நீ. நான்.. நாம்...

முதுசத் தொகுப்பு

**இதழ்-11, ஏப்ரல்/டிசம்பர்-2023**






இதழ் - *11*

பக்கங்கள் - *44*

வகை - காலாண்டு சிற்றிதழ்

தளக்கோலம் - ஜே.எம்.இஹ்ஷான்

வெளியீடு

மூதூர் ஜே.எம்.ஐ வெளியீட்டகம்

முதன்மை ஆசிரியர்

ஜுனைட் முஹம்மது இஹ்ஷான்

வெளியீட்டாளர்

நியாஸ் ஆஷா பாலின்

ஆலோசகர்கள்

தமிழ்நெஞ்சம் அமீன் - பிரான்ஸ்

வைத்தியர் அருமைநாதன் சதீக்குமார்

சுஸானா முனாஸ் - எழுத்தாளர்

சுஜானா நளீர் - ஆசிரியர்

முகம்மது அஸ்மி - எம்.பி.நியூஸ்

அசீஸ் முஹம்மது றஜீஸ்

புஹாரி றெசீன் றீஸா - எழுத்தாளர்



*0262238593/0771020030*

*094-717891887*

*Muththithal Mutur*

*muturjmi@gmail.com*

*www.mutur-jmi.com*

*Bazar Mosque Road*



விலை - 300.00



**நம்மட படைப்புகள் இலவச கண்காட்சி** — 22

**மூதூர் வலயத்தின் பரீட்சை பெறுபேறுகளின் பகுப்பாய்வு** — 17

**கரப்பான்பூச்சி** தலையில்லாமல் உயிர்வாழுமா? — 09

**எம்.எஸ்.அமானுல்லா** நேர்காணல் - ஏ.எல்.எம்.பௌஸி — 07

**இஸ்லாத்தின் பார்வையில் விமர்சன சிந்தனை** சகி அஹமட் - தோப்பூர் — 29

**வெண் புரியாணி** — 35

**ஊர்க்குருவி** — 38,39

**மூதூர் நியூஸ்** — 40,41

**நூற்றாண்டு விழா** மூதூர் மத்திய கல்லூரி — 36

**இஸ்லாத்தின் பார்வையில் ஒட்டகம்** மூதூர் எப்.எம்.நஸீம் — 31

**அக்கியூட் அப்பன்டிசைட்டிஸ்** Dr ஜலீலா முஸம்மில் — 14

# ஆசிரியர் செய்தி

ஜே.எம்.இஃறஷான்

**முத்திதழ் காலாண்டு இதழின் *11* ஆவது இதழாக வெளிவந்துள்ள இச்சிற்றிதழ் மூதூர் மண்ணின் கடந்த நான்கு மாதங்களுக்கான பிரதான தகவல் ஆவணங்களை சுமந்து வந்துள்ளது.**

**அந்தவகையில் இம்மாத முத்திதழ் சஞ்சிகையில் மூதூரில் இடம்பெற்ற நிகழ்வுகள், கல்விசார் அடைவுகளும், பெறுபேறுகளும் மற்றும் இலக்கிய ஆக்கங்களையும் ஆவணப்படுத்தலாக வெளியீடு செய்யப்பட்டுள்ளது.**

**குறிப்பாக புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த (சா/த) பரீட்சை, க.பொ.த (உ/த) பரீட்சை என்று மூன்று முக்கிய பரீட்சைகளின் பகுப்பாய்வுகளும் ஒரே பார்வையில் காணமுடியுமாகும்.**

**மூதூர் மத்திய கல்லூரி நூற்றாண்டு கொண்டாட்டம், கலாசார மண்டப திறப்பு விழா, தேசிய வாசிப்பு மாத நம்மட படைப்புகள் கண்காட்சி, விழிப்புணர்வு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பல்வேறு நூல் வெளியீடுகளும் இடம்பெற்றுள்ளன.**

**புதிய பரிணாமத்துடன் வெளிவந்துள்ள முத்திதழ் சஞ்சிகையின் இந்த இதழ் வாசகர்களுக்கும், மாணவர்களுக்கும் பல்வேறு சுவாரசியமான தகவல்களையும், செய்திகளையும் அளிக்கும் என்று நம்புகின்றேன்.**

இவ்விதழின் தனிநபர் ஆக்கங்கள் மற்றும் பிரசுரங்கள் குறித்த ஆக்கத்தின் உரிமையாளரே பொறுப்பாளர். ஆக்கத்தின் நிறை, குறைகளுக்கு இதழாசிரியர் பொறுப்பேற்கமாட்டார்.

## தேசிய இளைஞர் மெய்வல்லுனர் போட்டியில் *800m* ஓட்டத்தில் முதலிடம்



*2023 ஆம் ஆண்டுக்கான 34 வது தேசிய இளைஞர் விளையாட்டு பெருவிழா கடந்த 16,17,18,19.11.2023 திகதிகளில் கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. 17ம் திகதி நடைபெற்ற 800m குறுந்தூர ஓட்டப்போட்டியில் மூதுரைச் சேர்ந்த ஆர்.எம்.நிப்ராஸ் அவர்கள் முதலிடம் பெற்றுக்கொண்டதோடு குறித்த தூரத்தை 1.55 நிமிடங்களில் ஓடி புதிய சாதனையை தேசிய இளைஞர் மெய்வல்லுனர் போட்டியில் நிலைநாட்டி ஊருக்கு பெருமை சேர்த்துள்ளார்.*

## மூதூர் வலயம் தேசிய மட்டத்தில் *6* இடங்களைப் பெற்று சாதனை



*19.11.2023 ஆம் திகதி சனிக்கிழமை அனுராதபுரத்தில் இடம்பெற்ற தேசிய மட்ட கர்நாடக சங்கீத/பரதநாட்டிய-2023 போட்டிகளில் தி/மூ/புனித அந்தோனியார் மகாவித்தியாலயம், கிளிவெட்டி மகா வ, கல்லடி மலை நீலியம்மன் வி, கட்டை பறிச்சான் விபுலானந்த வி, தி/மு/கட்டை பறிச்சான் விபுலானந்த வித்தியாலயம் பாடசாலைகள் கிழக்கு மாகாணத்தில் இருந்து தேசிய மட்ட போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி தேசிய சாதனை படைத்து மூதூர் கல்வி வலயத்திற்கு பெருமை சேர்த்துள்ளது.*




## தேசியமட்ட சாதனை
## அல்ஹம்ரா பாடசாலை மாணவன்




**தோ**ப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரி மாணவன் **ஹாரூன் முஹம்மது அஸ்கி** தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டியில் 20 வயதின் கீழ் தட்டு எறிதலில் மூன்றாமிடம் பெற்று வெண்கல பதக்கம் வென்று பாடசாலைக்கும், ஊருக்கும், வலயத்திற்கும் மற்றும் கிழக்கு மாகாணத்திற்கும் பெருமை சேர்த்துள்ளதாக கல்லூரியின் அதிபர் எஸ்.எம்.றஹீம் தெரிவித்தார்.

மூதூர் வலயம் பெற்றுக்கொண்ட முதலாவது பதக்கம் இதுவென்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இம்மாணவனை முறையாகப் பயிற்றுவித்த பயிற்றுவிப்பாளர் எச்.எம்.சுஹைல், உடற்கல்வி ஆசிரியர் கே.எம்.றிபாஸ் மற்றும் எம்.எம்.ஹிசாம் ஆசிரியர், பாடசாலையின் ஏனைய ஆசிரியர்கள், மாணவர்களை அழைத்துச் செல்வதற்கு பண உதவிகளை வழங்கிய பழைய மாணவர்கள் அனைவருக்கும் மூதூர் சார்பாக வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இதுபோன்ற சாதனைகளை எமக்கு அறிவிக்க 0771020030 அழைக்கவும்**

## தேசியமட்ட சாதனை
## அந்-நஹார் பாடசாலை மாணவி





**வ**ருடாந்த பொது நலவாய தினத்தை முன்னிட்டு கல்வி அமைச்சின் அனுசரணையோடு நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் தாய்மொழி மூலமான சிரேஷ்ட பிரிவில் மூதூர் அந்நஹார் மகளிர் கல்லூரி மாணவி **"செல்வி முஹம்மத் இபாஸ் சைனப் சஹா"** என்பவர் தேசிய மட்டத்தில் இரண்டாமிடம் பெற்று சாதனை நிலை நாட்டியுள்ளார்.

இதேவேளை இம்மாணவி சர்வதேச தாய்மொழி தினத்தை முன்னிட்டு பங்களாதேஷ் தூதுவராலயம் மற்றும் கல்வி அமைச்சு இணைந்து நடத்திய **"தாய் மொழி பல்வகைமையில் ஒற்றுமை"** எனும் தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரைப் போட்டியில் தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

மாணவி ஐ.சைனப் சஹா அவர்களை பயிற்றுவித்த பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் குறித்த மாணவிக்கும் முத்திதழ் சார்பாகவும், மூதூர் மண் சார்பிலும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

## தேசியமட்ட சாதனை
## மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவி



தி/மூ/மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் தரம் 11 இல் கல்வி பயிலும் செல்வி **முனாஸ் பாத்திமா றுக்சானா** என்ற மாணவி தேசிய மட்டத்தில் நடைபெற்ற சமூக விஞ்ஞான போட்டியில் நான்காம் இடத்தைப் பெற்று மூதூர் வலயத்தில் சாதனை படைத்துள்ளார்.

இம்மாணவி குறித்த போட்டியில் வெற்றி பெற முறையான பயிற்சியும் வழிகாட்டுதல்களையும் வழங்கிய மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரி ஆசிரியர்களுக்கும் ஒழுங்கமைப்பு செய்த அதிபர் மற்றும் பொறுப்பாசிரியர் அவர்களுக்கும் மூதூர் சார்பிலான வாழ்த்துகள்.

## பாராளுமன்றத்தின் கல்வித் துறைசார் மேற்பார்வைக் குழுவில் ஐவர் தேர்வு



ஆளுகையிலும், சட்டங்களை இயற்றுவதிலும், புதிய கொள்கைகளை முன்மொழிவதிலும், இருக்கின்ற கொள்கைகளை மாற்றுவதிலும், இருக்கின்ற கொள்கைகளை இற்றைப்படுத்துவதிலும், இளைஞர் பங்களிப்பினை வழங்குவதற்காகவும், ஆளுகைச் செயன்முறைகளில் இளைஞர் கண்ணோட்டமொன்றினை உள்ளடக்குவதற்காகவும் மற்றும் துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கு இளைஞர் பிரதிநிதித்துவத்தினை வழங்குவதற்காகவும், இலங்கை பாராளுமன்றம் திருத்தியுள்ள நிலையியற் கட்டளைகளைகளின் படி பாராளுமன்றத்தின் கல்வி மேற்பார்வைக் குழுவிற்கான இளைஞர் பிரதிநிதிகளுக்கான பயிற்சி நெறி கடந்த 13.05.2023 அன்று கொழும்பு பத்ரமுல்ல Waters Edge Hotel ல் நடைபெற்றது. இந்நிகழ்வில் மூதூரைச் சேர்ந்த N.nishath, M.Jihath, M.Sakry, IM. Sumry, R.Husain ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## தேசிய மட்டத்திற்கு மூதூர் பிரதேச செயலகம் தெரிவு








மகளிர், சிறுவர் விவகாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள இலங்கை சமூகப் பாதுகாப்பு சபையினால் 2022 ம் ஆண்டு தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட போட்டியில் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து மூதூர் பிரதேச செயலகம் தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. தேசிய மட்டத்திற்கு மூதூர் பிரதேச செயலகம் தெரிவு செய்யப்பட்டுள்ளதை கௌரவிக்கும் நிகழ்வு இன்று (2023-07-13) JKAP Park ஹோட்டலில் இடம்பெற்றது.

# எம்.எஸ்.அமானுல்லா

## எம்மண்ணின் மூத்த எழுத்தாளர்



**ஆக்கம் - ஏ.எல்.எம்.பௌஸி (திலிப்)**

*இலங்கையின் நவீன இலக்கிய செல்நெறியின் பின்புலத்தினை நோக்கும் போது திருகோணமலை மாவட்டத்தில் முத்தாகத் திகழுகின்ற மூதூரின் பங்களிப்பு ஆழமாகப் பார்க்கப்பட வேண்டியதாகும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. கவிதை, நாவல், சிறுகதை, நாடகம், திறனாய்வு, நாட்டாரி லக்கிய ஆய்வு என பல நிலைகளில் புத்தாக்க இலக்கியங்களை பிரசவிக்கச் செய்த பெருமை மிகு இலக்கிய வாதிகளைத் தன்னகத்தே கொண்ட பெருமைக்குரிய தலமாக மூதூர் மண் விளங்குகின்றது.*

*இந்தப் பின்னணியில் எம் மூதூர் மண்ணின் பெருமைவினை சிறுகதை இலக்கியத்தின் ஊடாக இலங்கையில் மட்டுமன்றி இலக்கிய உலகம் முழுக்க பேச வைத்த வரும் ஈழத்து சிறுகதை இலக்கியத்தின் ஜாம்பவாலிகளுள் ஒருவருமான அமரர் வ.அ. இராசரத்தினம் ஐயா அவர்களுக்கு அடுத்த இடத்தில் வைத்துப் பார்க்கப்பட வேண்டிய ஓர் இலக்கிய ஆளுமையாக விளங்குகின்ற* ***எம்.எஸ்.அமானுல்லா*** *அவர்களைப் பற்றிய கண்ணோட்டத்தை செலுத்துவதே இவ்விடயத்தின் நோக்கமாகும்.*

*1946 இல் மூதூரில் சாதாரண ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்த இவர், மூதூர் மண்ணின் முதலாவது விஞ்ஞான பயிற்றப்பட்ட ஆசிரியராவார். ஆசிரியராக, அதிபராக 35 வருடங்கள் கல்விப் புலத்திலே ஈடுபட்டு மிக உன்னதமான கல்விப் பணியாற்றி தனது அறுபதாவது வயதில் ஓய்வுபெற்றமை குறிப்பிடத்தக்கது. பள்ளி மாணவராக இருந்த காலம் முதலே வாசிப்பதிலும் எழுதுவதிலும் ஆர்வம் கொண்டிருந்ததாகவும் தனது தீவிரமான வாசிப்புப் பழக்கமே சிறுவயது முதல் சிறுகதை எழுதும் பழக்கத்தை ஏற்படுத்தியது என்றும் "ஒரு பெண்ணின் கதை" என்ற சிறுகதைத் தொகுப்பில் தூண் முகத்திலே குறிப்பிட்டுள்ளார். இந்தப் பின்புலத்திலே தான் இவர் தனது 15 ஆவது வயதில் 10 ஆம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் எழுதிய "இரு துளிக் கண்ணீர்" என்ற சிறுகதையை இதற்கு தக்க சான்றாகக் கூறலாம். இக்கதை யாழ்ப்பாணம் இணுவிலில் இருந்து வெளியான உதய சூரியன் பத்திரிகையில் பிரசுரமானமை என்பதும் குறிப்பிடத்தக்கது.*

*இவரது அனேகமான சிறுகதைகள்* ***(20 சிறுகதைகளில் 16 சிறுகதைகள் பரிசுக்குரியவை.)*** *தேசிய, சர்வதேச மட்டங்களிலே போட்டி போட்டு பரிசில்களை தட்டிக்கொண்டவை. அவ்வாறு பரிசில்களும் பாராட்டுதல்களும் பெற்றுக்கொண்ட ஒரு சில சிறுகதைகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்படுகின்றன.*

*1.**'கருவேலங்காடுகள் தாண்டி'** - இரசிகமணி கனக செந்திநாதன் விருது (2004)*
*2.**'வரால் மீன்கள்'** கல்வி அமைச்சினால் ஆசிரியர்களுக்காக தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்ட போட்டியில் இரண்டாமிடம் (1997)*
*3.**'சுங்கான் மீன்'** - துரைவி தினகரன் இணைந்து நடாத்திய தேசிய மட்டச் சிறுகதைப் போட்டியில் மூன்றாமிடம் (1999)*
*4.**'மனித இனம்'** - நீதி நல்லிணக்க விவகார அமைச்சு நடாத்திய தேசிய மட்டப் போட்டி*

யில் பரிசு பெற்றது. (1998) (இது மொழிபெயர்க் கப்பட்டு நூலுருப்பெற்றது)

5.'**தலைமுறைகள்**' - மூதூர் பிரதேச செயலகத் தால் நடாத்தப்பட்ட போட்டியில் முதற்பரிசு பெற்றது. (2000)

6.'**கொய்யா மரத்தில் குருவிச்சைப் பூக்கள்**' - திருகோணமலை சாகித்திய விழா முதற்பரிசு

7.'**செவ்வால் அறனை**' - கலாசார அமைச்சு தேசிய மட்டத்தில் நடாத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு (2002)

எம்.எஸ். அமானுல்லா அவர்கள் ஆசிரியர், அதிபர், சிறுகதை கர்த்தா என்பவற்றுக்கு அப்பால் ஒரு சிறந்த மேடைப் பேச்சாளராகவும் திகழ்ந்தார். மூதூரின் முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் அப்துல் மஜீத் அவர்களின் விருப்பத்திற்குரியவராகவும் நெருக்கத்திற்குரியவராகவும் விளங்கிய இவர், சுவாரஸ்யமான தனது பேச்சுத் திறத்தினால் அடுத்தவர்களின் கவனிப்புக்குரியவராகவும் அனைவராலும் கவரப்பட்டவராகவும் விளங்கினார்.

காலவோட்டத்தின் மத்தியில் காத்திரமான சிறுகதைகளை எழுதியதன் ஊடாக தன் எழுத்தாளுமையை விருத்தி செய்யும் வாய்ப்பு கள் இருந்தும் தொடர்ச்சியான எழுத்துப் பணியில் அதீத ஈடுபாடு காட்டாது போனமை யானது மூதூர் மண்ணிற்கு ஏற்பட்ட இலக்கியத் தொய்வு என்றே நான் கருதுகின்றேன். தான் எழுதிய சிறுகதைகளை அவரால் உரிய காலத்தில் நூலுருவாக்கி வெளியிட முடியாது போனமை கூட இந்த தொய்வுநிலைக்கான காரணமாக இருக்குமோ என எண்ணத் தோன்றுகிறது. ஏனென்றால், "வரால் மீன்கள்" என்ற இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பு 2007 இல் வெளியாகின்ற அதேவேளை, "ஒரு பெண்ணின் கதை" என்ற அவரது இரண்டாது தொகுப்பு ஒரு தசாப்த காலத்தையும் தாண்டி 2017 இல் தான் வெளியிடப்படு கின்றது.

அதுவும் அவரது மாணவர்களின் உதவியுடன் தான் காரியசித்தமாகியுள்ளது. இதுபற்றி அவரே தனது. தொகுப்பு நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். எனவே, நூல்களை வெளியிட முடியாது போனதால் ஏற்பட்ட பின்னடைவே அவரது தொடர்ச்சியான சிறுகதை எழுத்துப் பணிக்கான முத்தாய்ப் பாய் இருந்திருக்கலாமோ என எண்ணத் தோன்றுகின்றது. "ஒரு பெண்ணின் கதை" என்ற சிறுகதைத் தொகுப்பின் நூன் முகத்தில் அவர் எழுதியுள்ளமையானது எமது மேற்படி எண்ணப்பாங்கிற்கு சான்றாகின்றமை கவனத்திற்குரியது.

"இது எனது இரண்டாவது சிறுகதைத் தொகுதி ஆகும். சிறுகதைகளைத் தொடர்ந்து எழுதுவேன் என்றோ அவற்றை நூலுருவாக்குவேன் என்றோ நான் ஆரம்ப காலத்தில் எண்ணியிருக்க வில்லை. சிலநேரம் இதுவே எனது இறுதி சிறுகதைத் தொகுதியாகவும் இருக்கலாம்"

நாடறிந்த நல்லதொரு சிறுகதையாசிரியராக இவர் எல்லோராலும் பேசப்படுவதானது, எம் மூதூர் மண்ணிற்குப் பெருமை சேர்ப்ப தாய் அமைகின்றது. தன் ஆழ்மனதின் சிந்தனை வெளிப்பாட்டினாலும் அதீத கற்பனை ஆற்றலினாலும் இவர் தனது சிறுகதைகளின் 100% ஆத்மார்த்தமான தொருதிருப்தியை வாசிப்பவர்கள் உள்ளத்தில் ஏற்படுத்தி விடுகின்றார். அந்த வகையில் மூதூர் மண் ஈன்றெடுத்த முதபெரும் சிறுகதை ஆசான். வ.அ. வின் இடத்தினை இவரைக் கொண்டு நிரப்ப வேண்டும்.

எது எப்படியோ தன் எழுத்தாளுமையா லும் ஆசிரியத்துவ மேன்மையாலும் சமூகப் பணிகளாலும் எம் மூதூர் மண் ணின் பெருமை மிக்கதொரு உயிரியாக உலாவரும் எம்.எஸ். அமானுல்லா அவர்கள், அவர் கூறியுள்ள மேற்படி கூற்றையும் தாண்டி இன்னும் இன்னும் எழுதி, மூதூர் இலக்கிய செல்நெறியிலே எழுத்துலகின் ஜாம்பவானாக மிளிர்ந்து ஆழ்ந்ததொரு தடத்தினைப் பதிக்க வேண்டும். தன் எழுத்து வீரியத்தினாலும் கதை கூறும் வீச்சினாலும் மூதூர் மண் ணிற்கு மென்மேலும் கௌரவத்தையும் பெருமையையும் பெற்றுக் கொடுக்க வேண்டும். இதுவே, எமது மண்ணின் ஒட்டுமொத்த இலக்கிய ஆர்வலர் களினதும் ஒருமித்த கருத்தாகும். இது எப்போதும் நிலைத்திருக்கப் பிரார்த்திப் பதே இந்த இலக்கியச் செம்மலுக்கு நாம் எமது ஊர்சார்ந்து வழங்குகின்ற மாபெரும் நன்றிக் கடனாகும்.



# தலை இல்லாமல் பத்து நாட்கள் உயிருடன் வாழுமா கரப்பான்பூச்சிகள்?

இதில் சந்தேகமே வேண்டாம். கரப்பான் பூச்சிகளால் தலை இல்லாமல், சில தடைகள் இல்லாதிருப்பின் மாதக்கணக்கில் கூட உயிர் வாழ இயலும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா!!! கரப்பான் பூச்சி வளர்ச்சி நிலைகளைப் பற்றி ஆராயும் மாசசூசெட்ஸ் ஆம்ஹெர்ஸ்ட் பல்கலைக்கழகத்தின் உடலியல் நிபுணர் மற்றும் உயிர் வேதியியலாளர் ஜோசப் குங்கல் விளக்குகிறார்.

அவர் கூற வருவதை நாம் மனித உடலுடன் ஒப்புமைப்படுத்தி பார்க்கலாம். மனிதர்களில் தலையில் அடிபடுவதால் இரத்த இழப்பு ஏற்படுகிறது. இதனால் இரத்த அழுத்தம் குறைகிறது. உயிர்வளி மற்றும் ஊட்டச்சத்தை முக்கிய திசுக்களுக்கு கொண்டு செல்வது தடுக்கப்படுகிறது. இதயத்திற்கு செல்லும் இரத்தத்தின் அழுத்தம் குறைவதால் உடலின் அனைத்து பகுதிகளுக்கும் இரத்தம் சென்றடைவதில்லை. உயிரணுக்களின் எரிபொருளான உயிர்வளி இல்லாமல் செல்கள் இறந்து, உறுப்புகள் செயற்பாட்டை இழந்து இறுதியில் மரணத்தைக் காண்கிறோம்.

மனிதர்கள் தங்கள் வாய் அல்லது மூக்கு வழியாக சுவாசிக்கிறார்கள். மூளை அந்த முக்கியமான செயல்பாட்டைக் கட்டுப்படுத்துகிறது. எனவே சுவாசமும் நிறுத்தப்படும். மனித உடல் தலை இல்லாமல் சாப்பிட முடியாது. பட்டினியானது விரைவான மரணத்தை உறுதி செய்கிறது.

"கரப்பான் பூச்சிகளுக்கு அதிக இரத்த அழுத்தம் தேவை இல்லை" மனிதர்களைப் போன்ற பெரிய அளவிலான இரத்த நாளங்கள் அல்லது சிறிய நுண்குழாய்கள் கரப்பான்களிடம் இல்லை. நமக்கு தான் அதிக அழுத்தம் தேவை. ஏனெனில் இதயத்திலிருந்து புவி ஈர்ப்புக்கு எதிராக மேல்நோக்கி மூளைக்கு இரத்தத்தை அனுப்ப வேண்டும்.

"கரப்பான்கள் திறந்த சுற்றோட்ட அமைப்பைக் கொண்டுள்ளன". அதில் மிகக் குறைந்த அழுத்தம் உள்ளது. அவற்றின் உடலுக்கு அதுவே போது மானது. நாம் அவற்றின் தலையை வெட்டிய பிறகு, அவற்றின் கழுத்து உறைதல் மூலம் மூடப்படும். "கட்டுப்பாடற்ற இரத்தப் போக்கு இல்லை".

கரப்பான்கள் சுவாசிப்பதற்கு நம்மைப் போன்ற திறன்மிக்க நுரையீரல்களைப் பயன்படுத்துவது இல்லை. அதிலும் குறிப்பாக இந்த சுவாசத்தை மூளை கட்டுப்படுத்துவதில்லை. நம்மைப் போல இரத்த சிவப்பணுக்கள் இல்லா ததால் உடல் முழுவதும் உயிர்வளியை சுமந்து செல்ல வேண்டிய அவசிய மில்லை.

மாறாக இவற்றின் சுவாசமுறையா னது ஏட்டு நுரையீரல் ஸ்பைரகில்ஸ் (Spiracles) மூலம் நடைபெறுகிறது. ஏட்டு நுரையீரல் என்பது, ஒரு வெளிப் புற சுவாசத் திறப்பு. இது பூச்சியின் உடலில் உள்ள சுவாசத்திற்கான துளை கள் ஆகும்.

ஸ்பைரகில் குழாய் காற்றை நேரடியாக திசுக்களுக்கு டிரக்கியா (Trachea) எனப் படும் குழாய்களின் மூலம் செலுத்து கின்றன. கரப்பான் பூச்சிகள் பொய்கி லோதெர்ம்ஸ் (Poikilotherms) அல்லது குளிர்ச்சியான இரத்தம் / மாறும் குருதி கொண்டவை (Cold- Blooded). இதன் பொருள் என்னவெனில் மனிதர்களைக் காட்டிலும் மிகக்குறைந்த அளவு உண வே அவைகளுக்குப் போதுமானது.

"ஒரு கரப்பான் பூச்சி ஒரு நாள் சாப்பிட்ட உணவை வைத்து ஒரு வாரம் வரை உயிர்வாழும்" என்று ஜோசப் குங்கல் கூறுகிறார். சில இரை உயிரிகள் அவற்றை வேட்டையாடாதவரை அவை பூஞ்சை அல்லது பக்டீரியா அல்லது வைரஸால் பாதிக்கப்படா தவரை இவை இறக்கும் கால அளவு நீடிக்கப்படலாம்.

கரப்பான் பூச்சிகளின் நரம்பு மண்டலம் எளிமையானது. உடல் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியிலும் அதைக்கட்டுப்படுத்தும் நரம்பணுத்திரள்கள் உள்ளன. எனவே அவை நீண்ட நாள் உயிர் வாழ இவை உதவுகின்றன.

டாயல்ஸ்டவுனில் உள்ள டெலாவேர் பள்ளத்தாக்கு கல்லூரியில் (Delaware Valley College in Doylestown) பூச்சியியல் வல்லுநர் கிறிஸ்டோபர் டிப்பிங் (Christopher Tipping) அமெரிக்க கரப்பான் பூச்சிகளை (பெரிப்லா னெட்டா அமெரிக்கானா) நுண்ணோக்கிகளின் உதவியுடன் அவற்றின் செயற்பாடுகளை கூர்ந்து நோக்கி சில ஆராய்ச்சிக் குறிப்புகளை வெளியிட்டுள்ளார். அவர்களின் ஆராய்ச்சி விவரமானது, தலை வெட்டப்பட்ட கரப்பான் பூச்சியின் காயத்தை உலர்த்த பல்லினை அடைக்கப்பயன்படுத்தும் மெழுகு கொண்டு அடைத்துள்ளனர். பின்னர் தொடர்ந்து கவனித்ததில் ஒரு குடுவையினுள் பல வாரங்கள் வரை உயிர் வாழ்ந்ததாம்.



American cockroach | German cockroach | Smokybrown cockroach | Oriental cockroach | Brown-banded cockroach

"பூச்சிகள் காங்லியா-நரம்பு திசுதிரட்டு தல்களின் கொத்துக்களைக் கொண்டுள்ளன. அவை உடலின் ஒவ்வொரு பிரிவிலும் அடிப்படை நரம்பு செயற்பாடுகளைச் செய்யக்கூடியவை. எனவே மூளை இல்லா மல், இவற்றால் உயிர்வாழத் தேவை யான சில எளிய செயற்பாடுகளை மேற்கொள்ள இயலும்" என்று டிப்பிங் கூறுகிறார்.

இதனால் கரப்பான்கள் ஒரே இடத்தில் இருக்கலாம்; நம்முடைய தொடுதல்களை யும் அவை உணரலாம்; அசையலாம். "வெட்டப்பட்ட தலையானது, அதிலுள்ள நீராவி வெளியேறும்வரை பல மணி நேரம் ஆன்டெனாக்களை முன்னும் பின்னுமாக அசைக்கும்" என்று குங்கல் கூறுகிறார்.

நூல் வெளியீட்டு நிகழ்வுகள்





## இந்து சமய மரணக்கிரியைகளில் சவ அடக்கம் ஒரு பார்வை—நூல் வெளியீடு

சைவப்புலவர், கலாபூசணம் அருளம்பலம் குகராஜா அவர்கள் எழுதிய "இந்து சமய மரணக்கிரியைகளில் சவ அடக்கம் ஒரு பார்வை" சமய ஆய்வு தொடர்பான மூன்றாவது நூல் கடந்த (**13-08-2023**) ஞாயிறு காலை **9.30** மணி அளவில் சம்பூர் கலாசார மண்டபத்தில் கொட்டியாரபுரப்பற்று இந்து சமய அபிவிருத்தி ஒன்றியத்தின் அனுசரணையில் வெளியீடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் கொட்டியாரபுரப்பற்று இந்து சமய அபிவிருத்தி ஒன்றியம், கொட்டியாரபுரப்பற்று கலை இலக்கிய மன்றம் மற்றும் ***Mutur JMI*** நிறுவனங்களினால் விருதுகளும், கௌரவிப்புகளும் வழங்கி வைக்கப்பட்டன.







## கனிகளைப் பறிக்கும் நேரம்—நூல் வெளியீடு

உஸ்தாத் அல்முஃப்தி முஹம்மது சௌமி கரீம் (அர்ரஷாதி) அவர்கள் எழுதிய மனிதவள மேலாண்மை தொடர்பான அரபு மொழி மூலமான "கனிகளைப் பறிக்கும் நேரம்" நூல் கடந்த 04.06.2023 ஞாயிறு கலை 9.00 மணி அளவில் மூதூர் பேல் கிராட் மண்டபத்தில் அகில இலங்கை ஜாமிய்யத்துள் உலமா மூதூர் கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வின் அதிதிகளாக அஷ்ஷெஹ் எம்.எம்.கரீம், அஷ்ஷெஹ் எம்.ரியாஸ், அஷ்ஷெஹ் எம்.சபூர் மௌலவி அவர்களும், நூல் நயவுரையை நஹீப் நிஸாத் நளீமி அவர்கள் மேற்கொண்டதோடு நன்றியுரையை நண்பர் புஹாரி ரீஷா அவர்களாலும் நிகழ்த்தப்பட்டது.

புத்தாக்க சிந்தனை மையம் என்ற நிறுவனம் ஊடாக பல்வேறு துறைசார், சமூக நலன் வேலைத்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றார். இதேவேளை உஸ்தாத் கே.சௌமி அவர்கள் அரபுலக பத்திரிகைகள் பலவற்றுக்கு பல்தரப்பட்ட தலைப்புகளில் ஆக்கங்களை பிரசுரம் செய்பவர். இதன் தொடர்ச்சியாக அவரது கன்னி நூலாக வெளிவந்துள்ளது கனிகளைப் பறிக்கும் நேரம் நூல்.








## தேடோடி நூல் வெளியீடு

முத்திதழ் சஞ்சிகையின் முதன்மை ஆசிரியர் ஜனாப் ஜே.எம்.இஹ்ஷான் அவர்களின் மூன்றாவது "நூலான தேடோடி பாகம் I" நூல் கடந்த 25.10.2023 ஆம் திகதி நம்மட படைப்புகள் கண்காட்சியில் மாலைநேர அரங்கில் வெளியீடு செய்யப்பட்டது.


இந்நிகழ்வில் முதன்மை அழைப்பாளராக சுஜாதா குலேந்திரகுமார் மாகாணக் கல்விப் பணிப்பாளர் (கிழக்கு மாகாணம்) அவர்கள் கலந்து சிறப்பித்ததோடு மாகாணக் கலாசார பண்பாட்டு அலுவல்கள் பணிப்பாளர் திரு.சி.நவனீதன் அவர்கள் முதல் பிரதியையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் இந்நூல் வெளியீட்டின் போது நூலாசிரியரின் புதல்வியின் ஒருவயது நிறைவை முன்னிட்டான பிறந்த நாள் கொண்டா ட்டமும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## உறவுகள் சொல்லும் உணர்வுகள் நூல் வெளியீடு

பன்னூல் ஆசிரியரும், நம்மட முற்றம் மாதாந்த சிற்றிதழின் முதன்மை ஆசிரியரு மான கதிர் திருச்செல்வம் அவர்களின் மூன்றாவது சிறுகதை நூலான **"உறவுகள் சொல்லும் உணர்வுகள்"** என்ற சிறுகதை நூல் கடந்த 26.10.2023 வியாழக்கிழமை மாலை 4.45 மணி அளவில் நம்மட படைப்புகள் கண்காட்சியின் பின்னேர அரங்கில் வெளியீடு செய்யப்பட்டது. இந்நூலின் நூலாசிரியரின் 3 வது சிறுகதை தொகுதியாக வெளிவந்துள்ளது.

## காதல் சிறகினிலே நூல் வெளியீடு

மல்லிகை செந்தூரன் அவர்களின் **"காதல் சிறக்கினிலே"** நூல் வெளியீடு கடந்த ஞாயிற்றுக்கிழமை (19/11/23) மு.ப 10.30 மணி அளவில் மல்லிகைத் தீவு பாடசாலையில் பன்னூல் எழுத் தாளர் திரு கனகசபை தேவகதாட்சம் அவர்களின் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் முதன்மை அழைப்பாளராக கிழக்கு பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. இரா.கிருபைராஜா அவர்கள் கலந்து சிறப்பித்தார்.





















## சுஸானா முனாஸ் அவர்களின் ஒற்றைப்பனை சிறுகதை நூல் வெளியீடு

மூதூரின் மூத்த பெண் எழுத்தாளர்களில் ஒருவரான திருமதி சுஸானா முனாஸ் எழுதிய ஒற்றைப்பனை சிறுகதைத் தொகுப்பு நூல் கடந்த வியாழக்கிழமை (19.10.2023) மாலை 4.00 மணி அளவில் மூதூர் பேல் கிராண்ட் மண்டபத்தில் வெளியீடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் தலைமையுரையை கவிஞர் சுஹைதா ஏ கரீம் அவர்களும், அறிமுகவுரையை பன்னூல் ஆசிரியர் மூதூர் முகைதீன் அவர்களும் நூல் திறனாய்வை எழுத்தாளர் கதிர் திருச்செல்வமும் நிகழ்த்தினர். மூதூரின் மூத்த பெண் இலக்கிய ஆளுமையாக திருமதி சுஸானா முனாஸ் அவர்கள் பயணித்து வருவதோடு இலங்கை பெண் கிளப் அங்கத்தவராகவும் செயற்பட்டு வருகின்றமை இவ்விடத்தில் நினைவூட்டத்தக்க விடயதானமாகும்.

10 சிறுகதைகளை உள்ளடக்கிய 88 பக்கங்களை கொண்ட இந்நூல் நூலாசிரியரின் கன்னி நூலுமாகும்.










## மதிபாலசிங்கம் அவர்களின் எனக்கொரு வரம் வேண்டும் கவிதை நூல் வெளியீடு


எண்ணம்போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் அனுசரணையில் கவியருவி ஈச்சிலம்பற்று திருவாளர் ப.மதிபாலசிங்கத்தின் "எனக்கொரு வரம் வேண்டும்" கன்னிக் கவி நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த ஜூன் 25 ஞாயிற்றுக் கிழமை. தி.மல்லிகைத்தீவு மகா வித்தியாலயத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் காலை 9மணிக்கு வெளியீடு செய்யப்பட்டது.

நிகழ்வினில் முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.செல்வநாயகம் அவர்கள் தலைமை தாங்கியதுடன் முதன்மை விருந்தினராக மூதூர் வலயக்கல்வி பணிப்பாளர் ஸீனத்துல் முனவ்ரா முகம்மது நளீம் அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார்.

மேலும் ஆன்மீக அதிதிகளாக சிவயோகச்செல்வன் த.சாம்பசிவ சிவாச்சாரியார், சிவஸ்ரீ நமசிவாயக் குருக்கள் உட்பட கல்விமான்கள், கலை இலக்கிய படைப்பாளிகள், சமூக சேவையாளர்கள், கிராம ஊக்குவிப்பு சங்கங்களின் உறுப்பினர்கள் போன்றவர்கள் கலந்து சிறப்பித்தனர்.







**Acute Appendicitis**

# அக்கியூட் அப்பன்டிசைட்டிஸ்

## எனப்படும் குடல்வளரி அழற்சி நோய்

Dr ஜலீலா முஸம்மில்
*ஆதார வைத்தியசாலை - ஏறாவூர்*

அப்பன்டிசைட்டிஸ் என்ற பெயரைக் கேள்விப்படாதவர்கள் இருக்க முடியாது. இருந்த போதும் நோய் பற்றிய தெளிவு பலருக்கும் இல்லை.
நம் அடிவயிற்றில் வலது பக்கத்தில் சிறுகுடல் முடிந்து பெருங்குடல் தொடங் கும் இடத்தில் வால் போன்று இருப்பது தான் குடல்வால் என அழைக்கப்படும் குடல் வளரி. எமது உணவுக் கால்வாயில் விரல் போல நீள வடிவான ஒரு சிறு பை போன்று தொங்கிக் கொண்டிருக்கும் உறுப்பு இது.

ஆரம்ப காலத்தில் இந்தக் குடல்வளரி பெரியதாக, தாவரங்களில் உள்ள செல்லு லோஸை சமிபாடடையச் செய்ய தேவை யான நொதியத்தைச் சுரக்கும் பணியைச் செய்து வந்தது. ஆனால் நாளடைவில் நமது மோசமான உணவுப் பழக்கவழக் கத்தால் இந்த குடல்வால் சுருங்கிச் சிறிய தாகிவிட்டதாகக் கருதப்படுகிறது. ஆனால் உண்மையில் இந்த உறுப்பின் பயன் என்ன என்பது எவருக்கும் தெரியாது. மனிதனின் கூர்ப்பின் போது தேவையற்றுப் போன ஒரு பகுதி எனக் கருதுவாரும் உளர். இதில் சளி போன்ற ஒரு திரவம் சுரப்பதுண்டு. அது வழிந்து பெருங்குடலில் சேர்ந்து விடும். இன்னும் சில காலங்களில் இந்த குடல்வளரி உடலில் இருந்து மறைந்து கூட போகலாம்.

இத்தகைய குடல்வளரியினால் எந்த ஒரு பயனும் நமக்கு இல்லாவிட்டாலும், அதில் சிறு பாதிப்பு ஏற்பட்டாலும், நம் உயிருக்கே ஆபத்து ஏற்படும் வாய்ப்பி ருக் கிறது. இந்தக் குடல்வளரியில் ஏற்படும் அழற்சியைத் தான் அக்கியுட் அப்பெண்டி ஸைட்டிஸ் என்று அழைப்பார்கள்.

### குடல்வளரி அழற்சி நோய் எவ்வாறு ஏற்படுகிறது?

நாம் உண்ணும் உணவில் உள்ள கல் குடலில் போய் அடைப்பதால் தான் ஏற்படுகிறது எனத் தவறாக எண்ணுபவர் கள் இன்றும் பலர் இருக்கிறார்கள். அப்பெண்டிக்ஸ் குழாயில் அடைப்பு

ஏற்படுவதால் தான் இது ஏற்படுகிறது. ஆனால் அது கல்லினால் அல்ல. மலத்துகள், குடற்புழுக்கள், அல்லது கட்டிகள் பொதுவாகத் தடையை ஏற்படுத்தும். இதனால் அதில் சுரக்கும் திரவம் வெளியேற முடியாது தடைப் பட்டு வீங்கும். அத்துடன் அதில் கிருமித் தொற்று ஏற்பட்டு அழற்சியடையும். இவ்வாறு அழற்சிக்குள்ளான குடல்வளரி வீங்கிச் சிவந்து காணப்படும்.



இந்த நிலையில் தொற்றுக்குள்ளான நபர் அப்பென்டிக்ஸை உடனடியாகச் சத்திர சிகிச்சை செய்து அகற்ற வேண்டும். இல்லையேல் வயிற்றறையில் அது வெடித்து விடும். வெடித்தால் கிருமிகள் வயிற்றறை முழுவதும் பரவி ஆபத்தாக மாறிவிடும்.
வயிற்றறையில் அவ்வாறு கிருமி பரவுவதை பெரிட்டனைட்டிஸ் (**Peritonitis**) என்பார்கள். இந்த நிலைமை அதிக ஆபத்தானது. மரணத்தையும் ஏற்படுத்தவல்லது. எந்த வயதிலும் இந்நோய் ஏற்படலாம் என்ற போதும் **10** முதல் **30** வயதிற்கு இடைப் பட்டவர்களே அதிகம் பாதிக்கப்படுவதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

**அறிகுறிகள்**

குடல்வளரியழற்சி நோய் இருந்தால் - முதலில் அடிவயிற்றில் வலியை உணரக்கூடும். அதிலும் இந்த வலியானது மிகவும் கடுமையாக, அடிவயிற்றின் வலது பக்கத்தில் இருக்கும். மேலும் அந்த வலி **6-24** மணிநேரத்திற்கு நீடித்திருக்கும். நிற்பதும் நடப்பதும் வேறெதுவும் வலியைத் தணிக்காது. இதன் முக்கிய அறிகுறி வயிற்றில் ஏற்படும் வலி தான்.

**இதன் வலியை எவ்வாறு ஏனைய வயிற்று வலிகளிலிருந்து வேறுபடுத்தி அறிவது?**

திடீரென ஏற்படும் வலியாக இது இருக்கும். தூக்கத்திலிருந்தால் திடீரென விழித்தெழச் செய்யும். ஆரம்பத்தில் முழு வயிறும் வலிப்பது போலிருக்கும். ஆனால் படிப்படியாக அவ்வலி வலது பக்க அடி வயிற்றில் நிலை கொள்ளும்.


முன்னெப் பொழுதும் அனுபவித்து இருக்காததாகத் தோன்றும் இவ்வலி சிலமணி நேரத்தில் மோசமாகும். படுத்தல், தலையணையை அணைத்தல், கால்களை மடக்கிப் படுத்தல் போன்ற எந்த நிலையிலும் குறையாது. ஆனால் எழுந்து நடக்கும் போதும், இருமும் போதும், தும்மும் போதும், ஆழ்ந்த மூச்செடுக்கும் போதும் தாங்க முடியாத அளவு கடுமையாக இருக்கும்.

- மலங்கழித்தால் வலி குறையும் என்பது போன்ற உணர்வு. ஆனால் மலம் கழித்தாலும் வலி தணியாது.
- வலியைத் தொடர்ந்து வேறு சில அறிகுறிகளும் தோன்றலாம்.
- கடுமையாக ஏறிக்காயாத குறைந்தளவு காய்ச்சல்
- இரத்தத்தில் பக்டீரியா தொற்றுக்கான காரணிகள் அதிகரித்து காணப்படுதல்.
- அடிவயிற்றில் வீக்கம்
- வாந்தி குமட்டல் - குமட்டல் பல்வேறு நோய்களுக்கு ஓர் பொதுவான அறிகுறியாக உள்ளதால், பலரும் குமட்டல் உணர்வை சாதாரணமாக நினைத்துவிடுவார்கள். ஆனால்

உங்களுக்கு அடிவயிற்று வலியுடன், குமட்டல் உணர்வு ஏற்படுமாயின் சாதாரணமாக எண்ணாமல், உடனே மருத்துவரை சந்தியுங்கள்

- பசியின்மை - குடலியக்கப் பிரச்சினை - குடல்வால் நோய் இருப்பவர்கள், மலச்சிக்கல் அல்லது வயிற்றுப்போக்கால் அவஸ்தைப்படுவார்கள். எனவே உங்களுக்கு குடலியக்க பிரச்சினை இருப்பின் உடனே மருத்துவரை அணுகுங்கள்.
- வயிற்றுப் பிடிப்புகள் - வயிற்றுப் பொருமல், வாய்வு வெளியேறுவதில் சிரமம். வயிற்று வலியுடன், வயிற்றுப் பிடிப்புகள் அடிக்கடி ஏற்படுதல். நினைவில் கொள்ளுங்கள், வலி கடுமையாக தாங்க முடியாத அளவில் இருந்தால், தாமதிக்காமல் மருத்துவரை அணுகுங்கள். இல்லாவிட்டால் மரணம் சம்பவிக்க நேரலாம்.

பொதுவாக எக்ஸ்ரே, ஸ்கேன் போன்ற எந்த ஆய்வுகூடப் பரிசோதனைகளும் இன்றி நோயாளியை சோதித்துப் பார்ப்பதன் மூலம் ஒரு மருத்துவரால் இந்நோயை நிச்சயிக்க முடியும். (**Clinical Diagnosis**) ஆனால் தற்போது இரத்த பரிசோதனை மற்றும் வயிற்றுப் பகுதி ஸ்கேன் (**Ultrasound Scan of Abdomen**) பரிசோதனையின் மூலம் இந்த நோயைக் கண்டுபிடித்து சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது.




**சிகிச்சை**

அப்பென்டிசைட்டிஸ் என மருத்துவர் தீர்மானித்தால் சத்திர சிகிச்சை மூலம் அதனை அகற்றுவார்கள். இப்பொழுது பாரிய வெட்டுக் காயம் இன்றி சிறு துளைகள் வழியான லப்ரஸ்கோபி சத்திர சிகிச்சையே பெரும்பாலும் செய்யப்படுகிறது. உடனடியாகச் செய்வதன் மூலம் உள்ளே அழற்சிக் குள்ளான குடல் வளரியானது வெடிக்கும் ஆபத் தைத் தவிர்க்கலாம்.

சில தருணங்களில் அழற்சிக்குள்ளான குடல்வளரியைச் சுற்றிச் சீள்க்கட்டி (**Appendiceal Abscess**) தோன்றலாம். நுண்ணுயிர் கொல்லி மருந்துகள் (**Antibiotics**) கொடுத்து அதைக் கட்டுப்படுத்துவதுடன் வயிற்றறையில் குழாய் விட்டு சீழள் அகற்றவும் மருத்துவர்கள் செய்வர். அதற்குப் பிற்பாடு 6 முதல் 8 வாரங்களுக்குப் பின் சத்திர சிகிச்சை மூலம் அழற்சிக்குள்ளான குடல்வளரியை அகற்றுவார்கள்.

சத்திரசிகிச்சை வசதி கிட்டாத போது அல்லது நோயாளி சத்திரசிகிச்சைக்கு உட்படக் கூடியளவிற்கு ஆரோக்கியமாக இல்லையெனில் நுண்ணுயிர் கொல்லி மருந்துகள் மூலமும், நார்ப்பொருள் குறைந்த இலகுவாக சமிபாடடையும் ஆகாரங்களுடனும் சிகிச்சை அளிப்பதுண்டு. சில ஆய்வுகள் சத்திரசிகிச்சை செய்யாமலே அப்பென்டி சைட்டிஸ் குணமாகும் என்று கூறுகின்றன. ஆயினும் சத்திரசிகிச்சைக்கான வசதிகள் இருக்கும் போது அவ்வாறான முடிவு எடுப்பது புத்திசாலித்தனம் என்று சொல்ல முடியாது.

குடல் வளரியழற்சி பற்றிய விளக்கத்தை மேற்கண்ட கட்டுரையில் பார்த்துள்ளோம். அனைவரும் வலதுபக்க அடிவயிற்றில் வலி பற்றிய அவதானத்தோடு இருந்து அதே நேரத்தில் வைத்தியரை விரைவாக அணுகி அதற்குரிய சிகிச்சை முறைகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இம்முறை வெளியாகியுள்ள 2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தர பரீட்சை முடிவுகளின் பிரகாரம்; மூதூர் வலயத்தில் 20 க.பொ.த உயர்தர பாடசாலைகளில் இருந்து 617 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி 512 மாணவர்கள் பல்கலைக்கழக தகுதியினை பெற்றுள்ளனர். இதன் சதவீதம் 83% மாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் மூதூர் வலயம் 1ம் நிலையை இந்த ஆண்டும் தக்கவைத்துள்ளது. இதேவேளை தேசிய ரீதியில் மாவட்ட ரீதியாக திருகோணமலை மாவட்டம் 3ம் இடம் (68.91%) மாகாண ரீதியாக கிழக்கு மாகாணம் முதலிடமும் பெற்றுள்ளமை விசேட அம்சமாகும்.

பகுப்பாய்வுகளின் அடிப்படையில் பாடரீதியாக சதவீதம் 2021 ஆம் ஆண்டிலும் பார்க்க 2022 ஆம் ஆண்டு பெறுபேறு அதீத உயர்ச்சியை காண்பிக்கின்றது. குறிப்பாக பௌதீக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் மற்றும் வர்த்தகப்பிரிவுத் துறைகள் ஒப்பீட்டளவில் ஏனைய பாடங்களை விட உயர்ச்சியைக் காட்டுகின்றன.

# மூதூர் வலயம் 2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேற்றின் பகுப்பாய்வு

மூதூர் வலயக்கல்வி அலுவலக பிரிவிற்குட்பட்ட 20 பாடசாலைகளில் 44 மாணவர்கள் "3A" சிறப்பு சித்தியை பெற்று சாதனை படைத்துள்ளனர். மேலும் வெளிவாரியாக 3 மாணவர்கள் 3A சித்தியும் பெற்றுள்ளனர். இதேவேளை 3A சித்தியை காட்டிலும் அதற்குக்குறைவான சித்தியை பெற்ற மாணவர்கள் மாவட்ட நிலையில் முன்னிலையில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் மருத்துவத்துறை மற்றும் பொறியியல் துறைக்கு இம்முறை 6 மாணவர்கள் தேர்வாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. வரலாற்றில் முதல் தடவையாக 44 மாணவர்கள் 3A சித்தி பெற்று அதிகூடிய 3A பதிவாகிய ஆண்டாக இந்த ஆண்டை அடையாளப்படுத்த முடியும்.

பாடசாலை ரீதியாகக் கடந்த ஆண்டைவிட இவ்வாண்டு க.பொ.த சாதரணதர பரீட்சை பெறுபேற்றின் அடைவுவீதம் உயர்வைக் காட்டியுள்ளது. திட்டமிட்டு கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பு செய்த வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி முனவ்வரா நளீம் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் ஜனாப் எம்.ஸியாத், உதவிக்கல்விப் பணிப்பாளர் எம்.எம்.அப்பாஸ், ஆகியோரோடு வலயக்கல்வி அலுவலக உத்தியோக தத்தர்கள் மற்றும் பாடசாலை அதிபர் என்பவர்களுக்கும் குறிப்பாக பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்களுக்கும் இவ்விடத்தில் நன்றிகளும் பாராட்டு களும் உரித்தாகட்டும்.

**மூதூர் வலயத்திற்குட்பட்ட கல்வி நிறுவனங்களில் 3A சித்திபெற்ற எண்ணிக்கை விபரம்**

- T/Mu/Fathima Muslim Ladies College - 11
- T/Mu/Mutur Muslim Ladies College - 9
- T/Mu/An-Nahar Girls M.V - 9
- T/Mu/Mutur Central College - 5
- T/Mu/Al-Mina Maha Viddiyalaya - 4
- T/Mu/Elangaithurai Muhaththuvara.H.C - 4
- Nathwathul Ulama Arabic College - 4
- T/Mu/Al-Hilal Central College - 3
- T/Mu/Al-Hamra Central College - 1
- T/Mu/Al-Hithaya Maha Vid - 1
- Rawlathul Jannah Arabic College - 1

## மருத்துவ பீடத்திற்கு மூதூரில் இருந்து தெரிவாகிய மாணவர்கள்













## பொறியியல் துறை மாணவர்கள்







## தொழினுட்பத் துறை மாணவர்கள்







## கலைத்துறைக்கு மூதூரில் இருந்து தெரிவாகிய மாணவர்கள்





































# கலைத்துறைக்கு மூதூரில் இருந்து தெரிவாகிய மாணவர்கள்




























































## கலைத்துறைக்கு மூதூரில் இருந்து தெரிவாகிய மாணவர்கள்































வர்த்தகத்துறை மாணவர்




## கல்விசார் கௌரவிப்பும் பாராட்டு நிகழ்வும்














மூதூர் வலயக்கல்வி பிரிவிற்கு உட்பட்ட பாடசாலைகளைச் சார்ந்த ஆசிரியர்கள், மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த 2023.10.10 ஆம் திகதி மூதூர் சம்பூர் கலாசார மண்டபத்தில் மூதூர் கல்வி வலயத்தின் கௌரவிப்பு நிகழ்வு மூதூர் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி சீனத் முனவ்வரா நளீம் அவர்களின் தலைமையில் பி.ப 3.00 மணியள வில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்குமாகாண கல்விச் செயலாளர் திரு. திசநாயக்கா அவர்களும் சிறப்பு விருந்தினராக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி. சுஜாதா குலேந்திரகுமார் அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

2020,2021 காலப்பகுதியில் GCE A/L பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களுக்கும், குறித்த மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்கள், மற்றும் உழைத்த அதிபர்களும் இந்நிகழ்வில் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது. மேலும் 2021 (2022) மற்றும் 2022 (2023) ஆண்டுகளில் கிழக்கு மாகாணத்தில் 17 வலயங்களில் இரண்டு முறையும் மூதூர் கல்வி வலயம் (முதலாம்) இடத்தை பெற்றமைக்காக கல்விச் செயலாளர், மாகாணக் கல்விப்பணிப்பாளர் ஆகியோரால் மூதூர் வலயத்துக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

2021இல் 44 பேர் 03A பெற்ற மாணவர்களும் 2020 இல் பல்கலைக்கழக அனுமதி பெற்ற 150 மாணவர்களும், 2021 இல் பல்கலைக்கழக அனுமதி பெற உள்ள 144 மாணவர்களும் இவ்விழாவில் கௌரவிக்கப்பட்டமையும் விசேட அம்சமாகும்.














# நம்மட படைப்புகள் கண்காட்சி

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மூதூர் ஜே.எம்.ஐ நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட இலவச கண்காட்சி கடந்த ஒக்டோபர் 25 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை மூதூர் ஆசிரியர் வாண்மை விருத்தி மையத்தில் நடைபெற்றது.












ஐந்து நாள் கொண்ட இந்த இலவசக் கண்காட்சியில் மூதூர் மண் சார்ந்து வெளிவந்த நூல்கள், சஞ்சிகைகள், கையேடுகள், குறுந்திரைப்படங்கள், புகைப்படங்கள், ஓவியங்கள் போன்ற வெளியீடுகளோடு மூதூர் சார்ந்த தொன்மையான பழங்கால பொருட்கள் மற்றும் YouTube கலைஞர்களின் நேர்காணல் என்று பல்வேறு இலக்கிய மற்றும் பண்பாட்டியல் சார்ந்த அம்சங்களை காணக்கூடியதாக இருந்தது.



மேற்படி கண்காட்சியில் முதன்மை அழைப்பாளர்களாக மூதூர் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி முனவ்வறா நளீம், மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார், கிழக்கு மாகாண கலாசாரப் பண்பாட்டு அலுவல்கள் பணிப்பாளர் திரு சி.நவனீதன், மூதூர் பிரதேச செயலாளர் ஜனாப் எம்.பி.எம்.முபாறக், உதவி பொலிஸ் அத்தியட்சகர், மூதூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, மூதூர் தள வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் திரு மோகன குமார், 3CD நிறுவனத் தலைவர் வைத்தியர் ஜனாப் கே.எம்.ஷாஹிர், சிரேஷ்ட சட்டத்தரணி ஜனாப் ஜே.எம்.லாஹிர், லயன்ஸ் கழக ஒருங்கிணைப்பாளர்களான திரு. கதிர் திருச்செல்வம், ஜனாப் இல்யாஸ் முபாரிஸ் ஆகியோரோடு ஆசிரியர் வள நிலைய முகாமையாளர் எம்.மாஹிர் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.
























குறித்த நிகழ்வில் மாலை நேர அரங்குகளில் உறவுகள் சொல்லும் உணர்வுகள் (சிறுகதை தொகுப்பு), தேடோடி (கட்டுரைத் தொகுப்பு) என்ற இரு நூல்கள் வெளியீடு செய்யப்பட்டதோடு இரு புதுமுக இளம் தயாரிப்பாளர்களினான ரிஷ்லி அக்தாப் மற்றும் முஹம்மது நிஸ்ரான் என்பவர்களினால் முறையே கிழவன், மதி என்னும் குறும்படங்களும் வெளியீடு செய்யப்பட்டன. அத்தோடு மூதூரில் Ceylon Voice Media சார்பாக YouTube நிறுவன Silver Button Unboxing நிகழ்வும் இடம்பெற்றது.

குறிப்பாக மூதூர் சார்ந்த குறும்பட கலைஞர் களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவமும், மூதூர் பிரதேச சபை நகர சுத்திகரிப்பு ஓய்வுநிலை பணியாளர்களுக் கான கௌரவிப்பு விழாவும் ஏற்பாடு செய்யப்பட்டமை விசேட அம்சமாகும்.

நம்மட படைப்புகள் கண்காட்சி மூதூர் மண்ணின் கலைஞர்களை ஒன்றிணைப் பதோடு அவர்களின் படைப்புகளை மக்கள் மயப்படுத்தும் நோக்குடன் மூதூர் ஜே.எம்.ஐ தனியார் நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தபோதும், இந்நிகழ்வு 2026 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள Mutur JMI நிறுவனத்தின் 10 ஆண்டு நிறைவை முன்னிட்டான மாவட்டம் தழுவிய கண்காட்சிக்கான ஒரு பரீட்சார்த்த நிகழ்வாக ஒழுங்கமைப்பு செய்யப்பட் டதாகும் என்று அந்நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் Junaid Mohamed Ihshan தனது கருத்தை இவ்விடத்தில் பதிவு செய்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.


























# வலயக் கல்வி அலுவலகம் மூதூர் தரம் - 05 புலமைப் பரிசில் பெறுபேறு - 2023

*2023* ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளின் படி மூதூர் வலயக்கல்வி அலுவலக பிரிவுக்குட்பட்ட *82* பாடசாலைகளை சார்ந்து *1366* மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி மாவட்ட வெட்டுப் புள்ளி *144* க்கு மேல் *157* மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர். அந்தவகையில் மூன்று கோட்டக்கல்வி பிரிவிலும் தி/மூ/ஜாயா வித்தியாலய மாணவன் புஸ்பாகரன் சாருஜன் *185* புள்ளிகளை பெற்று வலயத்தில் முதலிடம் பெற்றுள்ளதோடு மாவட்டத்தில் *2* ஆம் இடமும் பெற்று வலயத்திற்கு பெருமை சேர்த்துள்ளார். இதேவேளை மூதூர் வலயத்தில் தி/மூ/அந்-நஹார் மகளிர் ம.வி பாடசாலையில் *13* மாணவர்கள் சித்திபெற்று கூடிய மாணவர்கள் சித்திய டைந்த பாடசாலையாக பதிவு செய்துள்ளது. மேலும் *70* புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை *1094* ஆகும். இந்த சதவீத அடிப்படையில் கடந்த ஆண்டைவிட இம்முறை குறைவான சித்தி வீதத்தை காண்பித்துள்ளது.



புலமைப்பரிசில் பரீட்சியில் வலயத்தில் முதலிடம் பெற்ற **புஸ்பாகரன் சாருஜன்**

வலயக் கல்வி அலுவலகம் மூதூர் தரம் -05 புலமைப் பரிசில் பெறுபேறு - 2023 - வெட்டுப்புளிக்குமேல் - நிலை

| தொ.இல | பாடசாலை | | வெ.பு.மே. எண்ணிக்கை | பெற்ற வீதம் | Rank |
|---|---|---|---|---|---|
| 1 | தி.ʼ.மூ.ʼ.மல்லிகைத்தீவு ம.வி. | 8 | 4 | 50 | **1** |
| 2 | தி.ʼ.மூ.ʼ.பட்டித்திடல் ம.வி. | 14 | 6 | 43 | **2** |
| 3 | தி.ʼ.மூ.ʼ.சேனையூர் வித் | 5 | 2 | 40 | **3** |
| 4 | தி.ʼ.மூ.ʼ.ஜாயா வித் | 32 | 12 | 38 | **4** |
| 5 | தி.ʼ.மூ.ʼ.புனித அந்தோனியார் ம.வி. | 14 | 5 | 36 | **5** |
| 6 | தி.ʼ.மூ.ʼ.அறபா நகர் வித் | 12 | 4 | 33 | **6** |
| 7 | தி.ʼ.மூ.ʼ.புர்க்கானியா வித் | 15 | 5 | 33 | **6** |
| 8 | தி.ʼ.மூ.ʼ.வெருகலம்பதி இந்து ம.வி. | 6 | 2 | 33 | **6** |
| 9 | தி.ʼ.மூ.ʼ.கூனித்தீவு நாவலர் வித் | 11 | 3 | 27 | **9** |
| 10 | தி.ʼ.மூ.ʼ.விபுலாநந்தர் வித் | 19 | 5 | 26 | **10** |
| 11 | தி.ʼ.மூ.ʼ. அந்-நஹார் மகளிர் ம.வி. | 51 | 13 | 25 | **11** |
| 12 | தி.ʼ.மூ.ʼ.மேன்கமமம் வித் | 8 | 2 | 25 | **12** |
| 13 | தி.ʼ.மூ.ʼ.ஹக்கீம் வித் | 4 | 1 | 25 | **12** |
| 14 | தி.ʼ.மூ.ʼ.திரு இருதய வித் | 14 | 3 | 21 | **14** |
| 15 | தி.ʼ.மூ.ʼ.முன்னம்போடி வெட்டை அதக வித் | 5 | 1 | 20 | **15** |
| 16 | தி.ʼ.மூ.ʼ.கிளிவெட்டி ம.வி. | 21 | 4 | 19 | **16** |
| 17 | தி.ʼ.மூ.ʼ.சம்பூர் ம.வி. | 27 | 5 | 19 | **17** |
| 18 | தி.ʼ.மூ.ʼ.அல் -கைரியா வித் | 39 | 7 | 18 | **18** |
| 19 | தி.ʼ.மூ.ʼ.நஜீப் அப்துல் மஜீத் வித். | 63 | 11 | 17 | **19** |
| 20 | தி.ʼ.மூ.ʼ.சேனையூர் யூனியர் வித் | 30 | 5 | 17 | **20** |
| 21 | தி.ʼ.மூ.ʼ.தாருஸலாம் வித் | 6 | 1 | 17 | **20** |
| 22 | தி.ʼ.மூ.ʼ.மீனாட்சியம்மன் வித் | 12 | 2 | 17 | **20** |
| 23 | தி.ʼ.மூ.ʼ.பாத்திமா மகளிர் கல்லூரி | 43 | 7 | 16 | **23** |
| 24 | தி.ʼ.மூ.ʼ.பாரதி மகா வித் | 31 | 5 | 16 | **24** |
| 25 | தி.ʼ.மூ.ʼ.சின்னக்குளம் அதக வித் | 14 | 2 | 14 | **25** |
| 26 | தி.ʼ.மூ.ʼ.மூதூர் முஸ்லிம் மகளில் கல்லூரி | 66 | 9 | 14 | **26** |
| 27 | தி.ʼ.மூ.ʼ. ஸ்ரீ கதிரேசர் வித் | 15 | 2 | 13 | **27** |
| 28 | தி.ʼ.மூ.ʼ.அல் ஹிலால் யூனியர் வித் | 39 | 5 | 13 | **28** |
| 29 | தி.ʼ.மூ.ʼ.அல் -ஹிதாயா ம.வி. | 31 | 3 | 10 | **29** |
| 30 | தி.ʼ.மூ.ʼ.கலைமகள் இ.க. | 21 | 2 | 10 | **30** |
| 31 | தி.ʼ.மூ.ʼ.கடற்கரைச்சேனை | 11 | 1 | 9 | **31** |
| 32 | தி.ʼ.மூ.ʼ.ETM யூனியர் வித் | 23 | 2 | 9 | **32** |
| 33 | தி.ʼ.மூ.ʼ.அ்ல் - மினா வித் | 24 | 2 | 8 | **33** |
| 34 | தி.ʼ.மூ.ʼ.கங்குவேலி அகத்தியர் வித் | 12 | 1 | 8 | **33** |
| 35 | தி.ʼ.மூ.ʼ.அஸ்ரப் வித் | 25 | 2 | 8 | **35** |
| 36 | தி.ʼ.மூ.ʼ.தாருல் ஜன்னா வித் | 27 | 2 | 7 | **36** |
| 37 | தி.ʼ.மூ.ʼ.ஆலிம்சேனை | 15 | 1 | 7 | **37** |
| 38 | தி.ʼ.மூ.ʼ.அல் -குசைனியா வித் | 15 | 1 | 7 | **37** |
| 39 | தி.ʼ.மூ.ʼ.திருவள்ளுவர் வித் | 16 | 1 | 6 | **39** |
| 40 | தி.ʼ.மூ.ʼ.றோயல் யூனியர் வித் | 41 | 2 | 5 | **40** |
| 41 | தி.ʼ.மூ.ʼ.உமர்பாறுக் வித் | 21 | 1 | 5 | **41** |
| 42 | தி.ʼ.மூ.ʼ.அல்மனார் வித் | 22 | 1 | 5 | **42** |
| 43 | தி.ʼ.மூ.ʼ.அல்-ஸிபா வித் | 25 | 1 | 4 | **43** |
| 44 | தி.ʼ.மூ.ʼ.சதாம் வித் | 26 | 1 | 4 | **44** |

| | தோற்றியோர் | 70 புள்.மேல் | | வெ.ப.மே. | |
|---|---|---|---|---|---|
| | | எண் | வீதம் | எண் | வீதம் |
| மூதூர்க் கோட்டம் | 914 | 731 | 80% | 132 | 14.44% |
| | | | | | |
| தோப்பூர்க் கோட்டம் | 288 | 224 | 78% | 16 | 5.55% |
| | | | | | |
| ஈச்சிலம்பற்றுக் கோட்டம் | 164 | 139 | 85% | 9 | 5.48% |
| | | | | | |
| மூதூர் வலயம் | 1366 | 1094 | 80% | 157 | 11.49% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2022 | | | 86% | | 12.43 |
| | | | | | |
| வீழ்ச்சி | | | **6%** | | **1%** |

கோட்டக்கல்வி அலுவலக ரீதியாக மூதூர் கோட்டக்கல்வி அலுவலக பிரிவில் *50* பாடசாலைகளில் *32* பாடசாலைகள், தோப்பூர் கோட்டக்கல்வி அலுவலக பிரிவில் *16* பாடசாலைகளில் *7* பாடசாலைகளிலும், ஈச்சலம்பற்று கோட்டக்கல்வி அலுவலக பிரிவில் *16* பாடசாலைகளில் *5* பாடசாலைகளிலும் மாவட்ட வெட்டுப்புள்ளிக்கு மேல் மாணவர்கள் சித்தி அடைந்துள்ளமை

Resource by - **Mr. B.Subramaniyam**
ADE - Primary (Acting)

# மன பதட்ட நோய் என்றால் என்ன



ஹம்ஷாலினி
(உளவள ஆலோசகர்)

நமது வாழ்க்கையில் ஆரோக்கியம் என்பது மிகவும் முக்கியமான கூறு ஆகும். நம்மில் சிலர் உடல் ஆரோக்கியம் மட்டுமே ஆரோக்கியம் என கருதுகின்றனர். இருப்பினும் உடல் ஆரோக்கியத்துடன் உள ஆரோக்கியமும் உள்ளபோதே மனிதன் பூரணத்துவம் அடைகின்றான். நாம் எவ்வளவு உடல் ஆரோக்கியத்துக்கு கவனம் செலுத்துகின்றோமோ அதேயளவு உள ஆரோக்கியத்தையும் கவனம் செலுத்த வேண்டியது அனைவரினதும் கடமையாகும். உள ரீதியான பிரச்சனைகள் மற்றும் மாற்றங்களை நாம் தெரிந்து கொள்வது நமது சுய விழிப்புணர்வையும் மேம்படுத்தும். இன்றைய காலகட்டத்தில் பெரும்பாலான மக்கள் உள ரீதியான பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதை நாம் நாளாந்தம் காண்கின்றோம். வயதெல்லை என்பது இல்லாமல் சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவராலும் உள ரீதியான பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள் என்பது நிதர்சன உண்மையே!



இந்த ஆக்கத்தில் நாம் பார்க்க இருப்பது அதிகமாக மக்களால் உணரப்படும் மன பதட்ட நோய் பற்றியாகும்.



**மன பதட்ட நோய் என்றால் என்ன???**

இன்றைய காலகட்டத்தில் மன பதட்ட நோய் என்பது மக்கள் மத்தியில் பரவலாக பேசப்பட்டு வரும் ஒரு விடயமாக உள்ளது. மிகுந்த பயம், மன அழுத்தம் மற்றும் கவலையை ஏற்படுத்தும் மனநோய்களில் மன பதட்ட நோயும் ஒன்றாகும். மன அழுத்த நிகழ்வுகள், குடும்ப வரலாறு, தைரொய்ட், ஆஸ்துமா, நீரிழிவு நோய், மன அழுத்தம், போதைப்பொருள் பயன்பாடு, ஆளுமைக் காரணிகள் போன்றவை மன பதட்ட நோயை ஏற்படுத்தலாம்.

தற்போது அறிகுறிகள் என்னவென்று பார்ப்போம். உளவியல் அறிகுறிகள்: பதற்றம், அதீத பயம், கோபம், எரிச்சல், கவனக்குறைவு, தூக்கமின்மை, கட்டுப்பாடற்ற பயம் கலந்த கவலை மற்றும் எதிர்மறை எண்ணங்கள் மற்றும் மனதில் நிம்மதி இல்லை.

உடல் ரீதியானஅறிகுறிகள்: அதிகரித்த இதயத் துடிப்பு, மார்பு வலி, தலைவலி, தலைச்சுற்றல், இரைப்பை அழற்சி, வயிற்று வலி, முதுகு வலி, கழுத்து வலி மற்றும் நடுக்கம். யாருக்காவது இந்த அறிகுறிகள் அதிகமாக இருந்தால், அவர்கள் சிகிச்சைக்காக உளவியலாளர் அல்லது மனநல மருத்துவரை அணுகுவது மிகவும் சிறந்த வழியாகும். உடல், உள ஆரோக்கியத்துடன் வாழ்க வளமுடன்.



கிண்ணியாசபீனா

# வானவில்

வானிலே வில்லொன்று வண்ணமாய்த் தோன்றுதம்மா!
காணவே கண்களில் குளிர்ச்சியும் கூட்டுதம்மா!

கார்மேகத் தூறலின் கண்கட்டி வித்தையம்மா!
மாயங்கள் காட்டுது வந்தே பாரம்மா!

ஏழுநிறமும்
இணைந்து கோலங்கள் போடுதம்மா !
பாலருக்குப் பார்க்க மகிழ்ச்சி கொட்டுதம்மா !

வானமகளும்
நாணிடவது ஓடி மறையுதம்மா !
வண்ணங்கள் குழைத்தவரைத் தேடித் திரியுதம்மா !

தோரணமாய்த் தொங்குமுனைத் தொட்டிடுவோம் நாமே!
கார்முகிலில் கரைந்திடாமல் பிடித்திடுவோம் தானே!

விளையாடக் கொஞ்சம் நீயும் வந்திடுவாயே !
வீசும் தென்றலிடம் விடை அனுப்பிடுவாயே !

# புதிதாகப் பிறந்தேன்

இவள் – கலைநிலா
அப்ரா அஸ்ஹர் வெலிகம

உண்மை உறவு
யாதென அறிந்தேன்
உண்மையில் உலகினை
கண்டு வியந்தேன்

குற்றம் பார்த்தால்
சுற்றம் இல்லை என்று
சொன்னது அன்று
அந்த வார்த்தைக்கே
அர்த்தமில்லை இன்று

குற்றமே செய்யாத
உறவுகளை நீ
ஏன் காயப்படுத்துகின்றாய்?
சத்தமே இல்லாமல்
அமைதியாக போய் விடு!!

சில உறவுகளின்
செயல்களை எண்ணி
இதுவரை துடித்த என் இதயம்
இறந்து விட்டது இன்று


இறந்த என் இதயம்
இறைவனின் அருளால்
இன்னொரு முறைத் துடிக்க
உறவே இல்லாத உலகினில்
புதிதாகப் பிறந்தேன்

# பெண் போராளி

கருவறையில் இருந்து
அன்னை புறமுதுகு தள்ளி
பெற்றெடுத்த மறுகணமே
சதிகாரர்களின் கையில்
சிக்கித்தவிக்கும் பெண் குழந்தை!

தாய்ப்பாலுக்கு பதிலாய்
கள்ளிப்பால் ஊற்ற சிலர்
நெல் அள்ளி வாயில்
திணிக்க சிலர்–பிறவிக்குணம்
சொல்லி நரபலி கொடுக்க பலர்!

தலை தூக்கும் இடமெல்லாம்
தடைகள் ஓராயிரம்
தடைக்கற்களோ பல்லாயிரம்
எத்தனை இடுக்கண்
எத்தனை போராட்டம்?



பள்ளிக்கல்வி முடிந்ததும்
பட்டம் வாங்க பல்கலைக்கழகம்
செல்ல நாடினால்– சமூகம்
தரும் எச்சில் இலை சிறப்புமானி
பட்டத்துடன் படும் மனப்போராட்டம்!
கல்லெறிந்து குளவிக்கூடு
கலைப்பது போல்–சொல்லெறிந்து
கன்னியின் திருமணத்தை
கலைக்கும் வள்ளல்களால் படும்
கண்ணீர் போராட்டம்!

அடுப்பறையில் நின்று கொண்டு
அகப்பையை கையில்
ஏந்திக் கொண்டு
அடுப்பில் தீயோடு நடத்தும்
தியாகப் போராட்டம்!

உடல் வலிமையோடு போராடி
மாய்ந்தவனுக்கு–தரணியில்
மதிப்பு அதிகம்–நித்தம்
உள வலிமையோடு போராடும்
பெண்ணிற்கு மதிப்பேது?

ஹஷீதா அபூசாலி–
பொத்துவில்

## அண்மையில் காலமான தனது தாயாரை நினைந்து ஏதூர் புறாசில் எழுதிய கவிதையிது;




# எஸ்.எச்.அமீர்

கவிஞர், சிரேஷ்ட ஊடகவியலாளர்


உம்மா!
என்னைப் போல தொழுகின்றாய்
என்னைப் போல அழுகின்றாய்
என்னைப் போல சிரிக்கின்றாய்
என்னைப் போல இருக்கின்றாய்யென
என்னில் ஒரு மாதிரி உங்களைக் கண்ட
முன்மாதிரி அன்னையே!
நல்லதாய் சிந்தித்தீர்கள்
நல்லதாய் செய்தீர்கள்;
நல்லதாய் செய்வித்தீர்கள்
உம்மா! தூய்மையான
நல்ல தாய்மா நீங்கள்!!

ஈமானிய தன்மைகளில்
முதன்மையான நீங்கள்
கனமான போர்வையாய்
போர்த்திருந்த நாணத்தால்
கண் சிகிச்சையுமா
காணத் தவறினீர்கள் உம்மா?!

'எரிகிடங்கைப் பயந்துகொள்'!
என்கவிதைப் புத்தகத்தை
வாசிக்கக் கேட்ட நீங்கள்
யோசித்து விட்டு -
உன் எழுத்தில் உள்ளவற்றை
"எண்ணத்தில் இருத்திக் கொள்
உள்ளத்தில் உள்ளவற்றை
உடன் அமுல் படுத்திக் கொள்!'என
நல்ல கருத்துரையை
சொல்லி வைத்த நீங்கள்
என் கவிதைத் தலைப்பினாலே
எச்சரிக்க என்னையும்
மிச்சமும் கண்ணீர் சிந்தி - கையேந்தி
பட்சாதாபப்பட்டேன் உம்மா!?
*

உளவியல் படித்தேனும்மா
ஆனால் நீங்கள்தான்-
உளம் நொந்து வந்த போதெல்லாம்
ஆற்றுப்படுத்தினீர்கள் என்னை!

சுகாதாரம் படித்தேனும்மா'
ஆனால் நீங்கள்தான்
சுகம் இல்லாத போதெல்லாம்
சுக ஆதாரமாய் இருந்தீர்கள் எனக்கு!

சமாதானம் படித்தேனும்மா
ஆனால் நீங்கள்தான்
பிணக்குகள் வந்த போதெல்லாம்
இணக்கக் கருவியை
எடுத்துத் தந்தீர்கள் என்னிடம்!
*

செய்யும் தொழில் தன்னில்
அதிகரித்த ஊதியத்தில்
வெளிநாட்டில் வேலையொன்று
கிடைத்துவிட்ட வேளையிலே
அனுமதிக்காய் உங்களிடம்
அணுகியபோது
"நான் விடைபெற்றுச் செல்லும் வரை
விடையில்லை" என்றீர்கள்
மடை திறந்த வெள்ளம்போல்
அன்பொழுக - முழுக
என்முன்னே நின்றீர்கள்!
ஆதலினாலே,
நானே - என்னுள்
படைத்துவிட்ட ஆசைதன்னை
அடைத்துவிட்டேன் உம்மா!
உங்களுக்காய் -
பக்கம் இருந்து பார்ப்பதற்காய்
இருக்கும் வேளைதன்னில் அப்படியே
இருந்துவிட்டேன் உம்மா!
*

ஒரு முறை நான்
நாட்டின்
தலைவரை சென்று
கலையாக்கம் ஒன்றுக்காய்
விலைபார்க்காய் பரிசொன்றை
வென்று வந்து
உங்கள்
கரங்களில் தந்தபோது
புன்முறுவல் பூத்த நீங்கள்
"இந்தப் பரிசெல்லாம்
இப்போதே அழிந்துவிடும்.
எப்போதும் அழியாத
பரிசொன்றைப் பெறுவாயெனில்
அப்போதே
நான் மகிழ்வேன்...!"
என்றுரைத்த நீங்கள்
இப்போது
அதிபதியின் அந்த
அழியாத பரிசிலுக்கா
வெளியாகிவிட்டீர்கள்!

எழுதுவதற்கு எவ்வளவோ
எனக்கிருந்த போதும்
இறுதியாய் ஒருவார்த்தை
எழுதுகின்றேன் உம்மா...!
உங்களோடு வரும் வரை நான்
வாசலுக்கு வருவேன் உம்மா!
உங்கள் கணக்கில் தினம் தினம்
என் வரவை வைப்பேன் உம்மா!!



# இஸ்லாத்தின் பார்வையில் விமர்சன சிந்தனை

## Critical Thinking of Islamic View

இஸ்லாமிய உலகில், விமர்சன சிந்தனை (Critical Thinking) என்பது நம்பிக்கை, அறிவு மற்றும் சிந்தனை ஆகியவற்றின் அடிப்படை பண்புகளுடன் தடையின்றி ஒன்றிணைக்கும் ஒரு முக்கிய அம்சமாகும். இது முஸ்லீம்களை அறிவைத் தேடவும், கேள்வி கேட்கவும், அவர்களின் நம்பிக்கைகள், செயல்கள் மற்றும் அவர்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றி ஆழமாகப் பிரதிபலிக்கவும் ஊக்குவிக்கும் ஒரு கருத்தாகும். இஸ்லாத்தில் விமர்சன சிந்தனையை முறையாக கையாள்வது ஒரு சமநிலையான மற்றும் அறிவார்ந்த முன்னெடுப்பை வளர்க்கிறது. தனிநபர்கள் தங்கள் நம்பிக்கையை நவீன யுகத்தின் சவால்களுடன் ஒத்திசைக்க அனுமதிக்கிறது.

இஸ்லாத்தில் விமர்சன சிந்தனையின் மையத்தில் குர்ஆன் உள்ளது. குர்ஆன் விசுவாசிகளை அதன் வசனங்களைச் சிந்திக்குமாறு மீண்டும் மீண்டும் அழைக்கிறது.

சூரா அந்-நஹ்ல் (16:125) இல், "உங்கள் இறைவனின் வழியை ஞானத்துடனும் நல்ல போதனையுடனும் அழையுங்கள். மேலும் அவர்களுடன் தர்க்கிக்க நேரிட்டால் சிறந்த முறையில் தர்க்கம் செய்யுங்கள். உண்மையில், உங்கள் இறைவன் தனது வழியை விட்டு விலகியவர் யார் என்பதை நன்கு அறிந்தவன், மேலும் [சரியாக] வழிநடத்தப்பட்டவர் யார் என்பதையும் அவன் நன்கு அறிந்தவன்."

மேற்படி அல் குர்ஆன் வசனத்தில் அல்லாஹ் மனிதர்களை முறையான பரிசீலனைகளில் ஈடுபடவும், சரியான புரிதல்களை பெற்றுக்கொள்ளத் தேடவும் ஊக்குவிக்கிறான். முஸ்லிம்கள் படைப்பினங்கள், வானங்கள் மற்றும் பூமியின் அடையாளங்களை ஆராய்ந்து, அவற்றை அல்லாஹ்வின் வல்லமையின் வெளிப் பாடுகளாக அங்கீகரிக்க வேண்டும் என்பதையே இஸ்லாம் ஒவ்வொரு தனி மனிதனிடத்திலும் எதிர்பார்க்கிறது.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தில் விமர்சன சிந்தனைக்கு ஒரு முன்மாதிரியாக விளங்குகிறார். மார்க்கம் மற்றும் அன்றாட வாழ்க்கை விஷயங்களில் தங்களது கேள்விகளை கேட்கவும், விவாதிக்கவும், தெளிவு படுத்தவும் அவர் தனது தோழர்களை ஊக்குவித்தார். நபி (ஸல்) அவர்களது போதனைகளில் விமர்சன சிந்தனை உணர்வு தீவிரமாக ஊக்குவிக்கப் பட்டது. இதன் காரணமாகவே இஸ்லாத்தின் போதனைகளில் பல சலுகை களையும் எம்மால் பெற்றுக்கொள்ள முடிந்ததை மறுக்க முடியாது.

இஸ்லாத்தில் விமர்சன சிந்தனை என்பது பகுத்தறிவை வளர்ப்பது, உண்மையான அறிவு மற்றும் தவறான எண்ணங்களுக்கு இடையில் வேறுபடும் திறனை தெளிவாக வெளிப்படுத்துவதாகும். அறிவைப் பின்தொடர்வது இஸ்லாத்தில் மிகவும் மதிக்கப்படுகிறது. மேலும் அது ஒரு வணக்கமாகவும் கருதப்படுகிறது. நம்பகமான ஆதாரங்களில் இருந்து அறிவைப் பெறவும், தகவல்களைச் சரிபார்க்கவும், திறந்த மற்றும் ஆர்வமுள்ள மனநிலையுடன் கற்றல், கற்பித்தலை அணுகவும் முஸ்லிம்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

மேலும், இஸ்லாத்தில் விமர்சன சிந்தனை தனிப்பட்ட வளர்ச்சி மற்றும் சுய பரிசோதனைக்கு அப்பாற்பட்டது. சமூக சவால்கள் மற்றும் சமகால பிரச்சனைகளின் போது சிந்தித்து செயற்பட முஸ்லிம்களை இது தூண்டுகிறது. சமூக அநீதி, வறுமை மற்றும் சுற்றுச்சூழல் குழப்பங்கள் போன்ற சிக்கலான பிரச்சனைகளை இரக்கம், ஞானம் மற்றும் நேர்மறையான மாற்றத்திற்கான அர்ப்பணிப்புடன் தீர்ப்பதற்கு இந்த விமர்சன சிந்தனை வழிகாட்டுகிறது.

இஸ்லாமிய அறிவுப் பாரம்பரியம் விமர்சன சிந்தனையின் முக்கியத்துவத்தை நிரூபிக்கிறது. வரலாறு முழுவதும், முஸ்லிம் அறிஞர்கள் அறிவார்ந்த விவாதங்களில் ஈடுபட்டுள்ளனர். அறிவியல் கண்டுபிடிப் புகளை உருவாக்கி, கணிதம் மற்றும் வானியல் முதல் மருத்துவம் மற்றும்




தத்துவம் வரை பல்வேறு அறிவுத் துறைகளுக்கு பங்களித்துள்ளனர். இஸ்லாத்தில் விமர்சன சிந்தனை என்பது மதநம்பிக்கைகளுடன் ஒத்துப் போவது மட்டுமல்லாமல், அதன் ஒருங்கிணைந்த பகுதியாகவும் உள்ளது. அறிவுசார் வீரியத்துடன் அவர்களின் ஆன்மீகத்தின் ஆழத்தை ஆராய விசுவாசிகளை ஊக்குவிப்பதன் மூலம் இது நம்பிக்கை மற்றும் அனுபவத்தை வளப்படுத்துகிறது. விமர்சன சிந்தனைத் திறன்களை வளர்ப்பதன் மூலம், முஸ்லிம்கள் தங்கள் நம்பிக்கைகள் மற்றும் கடமைகளுக்கு உண்மையாக இருக்கும் போது உலகின் சிக்கல்களை வழிநடத்துவதற்கு சிறப்பாக தயாராகின்றனர் என்பதே உண்மை.

முடிவில், இஸ்லாத்தில் விமர்சன சிந்தனை என்பது நம்பிக்கை மற்றும் அறிவுத்திறனை ஒருங்கிணைக்கும் மாற்றியமைக்கும் மற்றும் அறிவூட்டும் நடைமுறையாகும். முஸ்லிம்களை கேள்வி கேட்கவும், சிந்திக்கவும், அறிவைத் தேடவும், அல்லாஹ்வுடனான ஆன்மீக தொடர்பை ஆழப்படுத்தவும் இது தூண்டுகிறது. விமர்சன சிந்தனையை வளர்ப்பதன் மூலம், குர்ஆனின் போதனைகளாலும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியான வாழ்க்கையாலும் வழிநடத்தப்படும் இரக்கத்துடனும் ஞானத்துடனும் சமகால சவால்களை எதிர்கொண்டு, நவீன யுகத்தில் இஸ்லாமிய சமூகம் முன்னேற முடியும் என்பதில் எவ்வித மறுப்புக்கும் இடமில்லை.

**சகி அஹமட் - தோப்பூர்**



# இஸ்லாமிய பார்வையில் ஒட்டகத்தின் அற்புதம்

எப்.எம்.நசீம்
மூதூர்

> ஒட்டகம் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளது என்பதை அவர்கள் பார்க்க வேண்டாமா?
>
> (அல்குர்ஆன்-88:17)

இது அல்லாஹ் எழுப்புகின்ற கேள்வியாகும். மனித சிந்தனையைத் தூண்டுகின்ற, மனிதனை அறிவியல் ஆய்வுக்குக் கொண்டு செல்கின்ற அற்புதமான கேள்வி இது!

தன்னுடைய பாலைவனப் படைப்பான ஒட்டகத்தின் அற்புதத்தைப் பற்றி மனிதனை சிந்தித்துப் பார்க்கச் சொல்கிறான். ஒட்டகத்தின் அற்புத ரகசியங்களின் முடிச்சுகளை அவிழ்க்கின்ற ஒரு கட்டுரை அண்மையில் இந்து தமிழ் நாளிதழில் வெளியானது.

அந்தக் கட்டுரை இதோ:

- **50 டிகிரியிலும் வியர்க்காது**

ஆடுகளையும், மாடுகளையும் பார்த்துப் பழகிய நமக்கு ஒட்டகம் என்பது விந்தையான விலங்காக இருப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால், ராஜஸ்தான் மாநிலத்தில் ஒட்டகங்கள் மந்தை மந்தையாகச் சுற்றித் திரிகின்றன.

இந்தியாவில் காணப்படும் ஒட்டகங்கள் ஒற்றைத் திமில் ஒட்டகங்கள். அரேபியன் வகையைச் சேர்ந்தவை. சராசரியாக 300 கிலோ எடை முதல் ஆயிரம் கிலோ எடைவரை வளரும். உயரம் 7 முதல் 8 அடி உயரம் வரை. சாதுவாகக் காணப்படும் ஒட்டகங்கள், மணிக்கு 65 கிலோ மீட்டர் வேகத்தில் ஓடும் திறன் படைத்தவை என்பது ஆச்சரியம்.

ஒட்டகம் குறுகிய கால இடைவெளியில் 30 டிகிரி முதல் 40 டிகிரி செல்சியஸ் வரை வெப்ப மாற்றத்தைத் தாங்கும் உடல் அமைப்பைப் பெற்றது. 50 டிகிரி செல்சியஸ் வெப்பத் தில்கூட இதன் உடலில் இருந்து வியர்வை வெளியேறாது. அதனால்தான் பாலைவனத்தில் தாக்குப்பிடிக்க முடிகிறது. பாலைவன மணல் பகுதியில் சுற்றித்திரியும் விலங்கினம் என்பதால், இயற்கையாகவே ஒட்டகங்களுக்கு வித்தியாசமான சுவாச உறுப்புகள் அமைந்துள்ளன. மூக்கு, வாய்ப்பகுதிகள் மிகவும் தடிமனாக இருப்பதால், இதன் மூக்குக்குள் எளிதாக மணல் புகாது. முன்னங் கால் களையும் பின்னங் கால்களையும் வித்தியாசமாக மடக்கி வைத்து இது படுத்திருப்பது வித்தியாசமான காட்சி.

- **ஒட்டகத்தின் தண்ணீர் அறை**

பாலைவனங்கள் என்றால் தண்ணீரே இருக்காது. அங்கு

வாழும் ஒட்டகங்களுக்குத் தண்ணீர் தாகம் எடுத்தால் என்ன செய்யும்? தண்ணீர்த் தேவையை எப்படிப் பூர்த்தி செய்துகொள்ளும்? உலகில் வாழும் பல உயிரினங்களுக்கும், வாழ்வதற்கு ஏற்ற உடலமைப்பை இயற்கையே கொடுத்திருக்கிறது. அதில் ஒட்டகமும் ஒன்று. ஒட்டகத்தின் முதுகுப் பகுதியில் திமில் போன்ற மேட்டுப் பகுதியைப் பார்த்திருக்கிறீர்களா? இந்த இடத்தில் கொழுப்பு உணவுப் பொருட்கள் சேமித்து வைக்கப்படுகின்றன.

- **ஒட்டகத்தின் இரைப்பையில் 3 அறைகள் உள்ளன**

முதல் இரு அறைகளின் சுவர்களில் தனித்தன்மை வாய்ந்த நீர்ச் செல்கள் உள்ளன. இதில்தான் ஒட்டகம் நீரைச் சேமித்து வைக்கிறது. இதோடு, ஒட்டகத்தின் தசைகளிலும் இணைப்புத் திசுக்களிலும் நீர் சேமித்து வைக்கும் அமைப்பு உள்ளது. திமிலில் சேமிக்கப்படும் கொழுப்பு உணவுப் பொருட்களின் மூலம் வளர்சிதை மாற்றம் ஏற்படும். இந்த வளர்சிதை மாற்றம் மூலம் ஒட்டகத்துக்குத் தானாகவே நீர் கிடைத்துவிடும்.

ஒட்டகம் ஒரு தடவை தண்ணீர் குடித்தால் தனது உடலின் மூன்றில் ஒரு பகுதி அளவுக்கு சுமார் 137 லீட்டர் தண்ணீரைக் குடித்துக் கொள்கிறது. ஒட்டகம் குடிக்கின்ற தண்ணீர் அதன் உடலில் எங்கே சேமித்து வைக்கப்படுகின்றது? இந்தத் தண்ணீர் ஒட்டகத்தின் திமில்களில் தான் சேமித்து வைக்கப்படுவதாகப் பரவலாக நம்புகின்றார்கள். ஆனால் உண்மை அதுவல்ல!

திமில்களில் இருப்பது சுமார் 40 கிலோ அளவிலான கொழுப்பாகும். இந்தக் கொழுப்பு, ஒட்டகத்தின் உடலில் உள்ள தண்ணீர் ஆவியாகிவிடாமல் தடுக்கின்றது. வெப்பத்தின் தாக்கம் உள்ளே பாயாமல் காக்கும் அரணாகத் திகழ்கின்றது. இந்தக் கொழுப்பு Metabolism – வளர்சிதை மாற்றம் அடைகின்ற போது, அதாவது உடலுக்குத் தேவையான சத்தாக மாறுகின்ற போது, அப்பொழுதும் அங்கு ஓர் அற்புதம் நிகழ்கின்றது.

- **ஒட்டகத்தின் உடலமைப்பு**

இமைகள் மூடினாலும் பார்வையை மறைப்பதில்லை. இமைகளின் தோல்கள் கண்ணாடிகள் போன்று ஒளி ஊடுறுவும் தன்மை கொண்டதாகும். அதனால் அவை கண்களை மூடிக் கொண்டு வெளியே பார்க்கும் சக்தி கொண்டவை. ஒட்டகத்தின் இந்தப்பார்வையிலும் அல்லாஹ்வின் அற்புதங்கள் ஒளிந்திருக்கின்றன.

ஒட்டகத்தின் உடல் மெல்லிய மயிர் தோலில் அமைந்துள்ளது. இந்தத் தோலமைப்பு ஒட்டகத்தைப் பகல் நேரத்தில் கரித்துப் பொசுக்குகின்ற சூரிய வெப்பக்கதிர்களின் பிரதிபலிப்பிலிருந்து காப்பதற்காகத் தான். அதே சமயம் இரவு நேரத்தில் வெப்பநிலை பூஜ்யத்திற்கும் கீழே போகும் போது அந்தக் குளிரின் கோர ஆட்டத்திலிருந்தும் இந்தத் தோலமைப்பு காக்கின்றது.

- **ஒட்டகத்தின் பாதங்கள்**

இந்த ஒட்டகத்தின் பாதங்கள் மனிதர்கள் அணிகின்ற ஷூக்கள் போன்று தரைச் சூட்டின் தாக்குதலிலிருந்து அதைப் பாதுகாக்கின்றது. அதிக எடை கொண்ட பாரங்களை ஒட்டகம் சுமந்து செல்கின்ற போது பாலை மணலில் புதைந்து உள்வாங்கிவிடக் கூடாது என்பதற்காக ஒரு பிரத்தியேக தொழில்நுட்பத்தில் அதன் பாதங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்படி ஒட்டகத்தின் ஒவ்வொரு உள், வெளி உறுப்புகளும் தனித்தனி அற்புதத்தைத் தாங்கி நிற்கின்றன.

**இதனால் தான் அல்லாஹ், "ஒட்டகம் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளது என்பதை அவர்கள் பார்க்க வேண்டாமா?" (88:17) என்று கேட்கின்றான்.**

# முஸ்லிம் தமிழ் உறவுக்கு ஓர் எடுத்துக்காட்டு

## எம்.எம். புகாரி ஐயாவும் நவரத்தினம் ஓவசியரும்



கே.எம்.எஸ் மூதூர்




மதார் முகைதீன் புகாரி ஆசிரியர் மூதூர் 06 ஆம் வட்டாரம், இக்பால் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டு நெய்தல் நகர் 01 ஆம் வட்டாரத்தில் வசித்து வந்தார். இவரது தந்தை மதார் முகைதீன் மூதூர் கங்கைத் துறையில் தோட்டம் செய்து வந்ததுடன் மூதூர் வெளியில் 21 ஏக்கர் வயல்காணியில் வேளாண்மையும் செய்துவந்தார். பெரும் நிலச் சுவாந்தரான இவர் நல்ல வசதி வாய்ப்புகளுடனும் வாழ்ந்து வந்ததுடன் ஏனைய சமூகத்தவர்களுடனும் நல்லுறவைப் பேணிவந்தார்.

மதார் முகைதீன் என்பவருக்கு 06 ஆண் பிள்ளைகளும் 02 பெண் பிள்ளைகளும் மக்கட் செல்வங்களாக உள்ளனர். 06 ஆண் பிள்ளைகளும் ஆசியர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்களுள் ஒருவர்தான் புகாரி ஆசிரியர்.

திரு.நவரத்தினம் ஓவசியர் யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணத்திலிருந்து மூதூருக்கு இடமாற்றம் பெற்றுவந்து, வீதி அபிவிருத்தி அதிகார சபையில் கடமையாற்றினார். இக்காலத்தில் இவர் மேலதிகமாக ஒப்பந்த வேலைகளில் ஈடுபட்டு தனது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொண்டார். இக்காலத்தில்தான் ஜனாப். புகாரி ஆசிரியரின் தந்தையுடன் கொடுக்கல் - வாங்கல்களில் ஈடுபட்டதுடன் இம்முஸ்லிம் குடும்பத்தவர்களுடன் மிக நெருக்கமான உறவுகளையும் பேணி வந்தார்.


திரு.நவரத்தினம் ஓவசியர் பல சொத்துக்களுக்கு உரிமையாளராக இருந்தபோது தனது போக்குவரத்திற்கென பிரத்தியேகமாக 1= (1•) கார் ஒன்றையும் வைத்திருந்தார். இக்காரைத் தனது தேவைக்குப் பயன்படுத்தும் நேரம் தவிர ஏனைய நேரங்களில் பயன்படுத்துவதற்காக ஜனாப். எம்.எம். புகாரி ஆசிரியரிடமே நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். இவர் பாடசாலை நேரம் தவிர ஏனைய நேரங்களில் இவ்வாகனத்தைத் தனது சொந்த வாகனம் போலப் பயன்படுத்தி வந்தார்.

இவ்வாறு காலப்போக்கில் மூதூரில் பல சொத்துக்களின் உரிமையாளரான திரு.நவரத்தினம் ஓவசியர் தனக்கு உரிமையான பல சொத்துக்களை ஜனாப். எம்.எம். புகாரி ஆசிரியரின் பெயரில் அதியுச்ச நம்பிக்கையின் நிமித்தம் உறுதி எழுதி அதனைப் பராமரித்து வரும்படி அனுமதியும் வழங்கியதுடன் வயல் காணிகள், கட்டிடங்கள் போன்றவற்றைப் பராமரித்து அதன் மூலம் வரும் வருமானங்களை நீங்களே பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு தனது தாயகமான யாழ்ப்பாணத்துக்குச் சென்றுவிட்டார். இச்சொத்துக்களை நன்கு பராமரித்து வந்த புகாரி ஆசிரியர் அதன் மூலம் கிடைக்கும் வருமானங்களையும் தனது சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்தாமல் சேமித்து வைத்திருந்தார்.

காலப்போக்கில் ஜனாப். புகாரி ஆசிரியரின் மனதில் வேறொருவரின் சொத்துக்கள் தனது பெயரில் இருப்பது ஒரு சஞ்சலத்தை ஏற்படுத்தியது. இதை யாழ்ப்பாணத்திலிருந்த திரு.நவரத்தினம் ஓவசியருக்குத் தெரியப்படுத்தி அவரை மூதூருக்கு வரவழைத்து விடயங்களை எடுத்துக் கூறினார். உங்களின் சொத்துக்களும் வருமானங்களும் உங்களுக்கேயுரியது. எனது பெயரில் இருப்பதை நான் விரும்பவில்லை. இதுவரை காலமும் நம்பிக்கையுடன் அதனைப் பராமரித்துப் பாதுகாத்துத் தந்திருக்கிறேன்.

இச்சொத்துக்களையும் அதன்மூலம் ஈட்டிய வருமானங்களையும் இதோ பெற்றுக் கொள்ளுங்கள் எனக் கூறியுள்ளார்.





திரு.நவரத்தினம் ஓவசியர் அவர்கள் நீங்கள் சொத்துக்களைப் பராமரித்து வந்தமைக்கான பிரதியுபகாரமாக அதன் அனைத்து வருமானங்களையும் பெற்றுக் கொள்வதுடன் சொத்துக்களையும் நீங்களே உரிமையாக்கிக் கொள்ளுங்கள் எனக் கூறியுள்ளார். இதை எம்.எம். புகாரி ஆசிரியர் மறுக்கவே சொத்துக்கள் அனைத்தையும் அரை வாசி விலைக்குத் தருகிறேன் எனக் கூறியும் அதனை மறுத்து விட்டார். இறுதியாக அச்சொத்துக்களை மற்றவருக்கு உரிய விலைக்கு விற்பனை செய்துவிட்டு காணி உரிமையாளரான திரு.நவரத்தினம் ஓவசியரிடம் ஒப்படைத்துவிட்டார்.

## மூதூர் நவரத்தினம் மண்டபம்

பிரபல தொழிலதிபரும் சமூக சேவையாளருமான திரு.நவரத்தினம் அவர்கள் மூதூர் பிரதேசத்திலுள்ள சொத்துக்களில் ஒன்றை தனது சமூக நலன்கருதி வாரிவழங்கியுள்ளார். இவ்வாறு வழங்கப்பட்ட காணியும் கட்டிடமும் தற்போது **“நவரத்தின மண்டபம்”** என்ற பெயரில் காட்சி தருகின்றது. இக்கட்டிடம் தி/மூ/ அந்-நஹார் மகளிர் மகா வித்தியாலய சந்திக்கருகில், மூதூர் 03 மத்திய வீதி சந்திக்கும் இடத்தில் கம்பீரமாகக் காட்சி தருகின்றது.

## நல்லூர் புதுமனை திறப்புவிழாவில் சிறப்பு விருந்தினர் ஜனாப். எம்.எம். புகாரி சேர்

திரு.நவரத்தினம் ஓவசியர் யாழ்ப்பாணம், நல்லூரில் புதிய வீடொன்றைக் கட்டினார். இதற்குக் குடி புகுவதற்குரிய சகல ஏற்பாடுகளும் கோலாகலமாக நடைபெற ஏற்பாடாகி இருந்தது. இப்புதுமனைப் புகுவிழாவிற்கு விருந்தினராக எம்.எம்.புகாரி ஆசிரியர் அவரின் தகப்பன் மதார் முகைதீன் அவர்களும் வரவேண்டுமென்று வேண்டிக் கொண்டதற்கிணங்க சம்மதம் தெரிவிக்கப்பட்டது.



இவர்களை அழைத்துச்செல்ல யாழ்ப்பாணத்திலிருந்து தனது காரில் மூதூருக்கு வந்து இவர்கள் இருவரையும் அழைத்துச் சென்று புதுமனைபுகுவிழாவின் போது அவ்வீட்டைத் திறப்புவிழா செய்யுமாறு அவ்வீட்டின் திறப்பை ஜனாப். எம்.எம்.புகாரி ஆசிரியரின் கையில் ஒப்படைத்தார் திரு.நவரத்தினம் ஓவசியர்.

ஜனாப். எம்.எம்.புகாரி ஆசிரியரினால் திறக்கப்பட்ட புதுமனைத் திறப்புவிழா வெகு சிறப்பாக இனிதே நடைபெற்றது. மூதூர் முஸ்லிம் - தமிழ் உறவுப் பாலத்திற்கு ஒரு கலங்கரை விளக்கமாக இந்நிகழ்வு அமைய வேண்டும். ஜனாப். எம்.எம்.புகாரி ஆசிரியரைப் போலவும் திரு.நவரத்தினம் ஓவசியரைப் போலவும் நேர்மையானவர்களாக நாம் அனைவரும் வாழப் பழகுவோமாக.





ஹஃபீரா ஹஃபி
கொழும்பு

# வெண் பிரியாணி

## செய்முறை

**தேவையானவை**

- கீரி சம்பா *1* கிலோ
- சிக்கன் *1-1 1/2* கிலோ
- மஞ்சள் கலக்காத மசாலா தூள் *2 - 2 1/2* மே.க
- சீரகம் தூள் *1 1/2* தே.க
- வெள்ளை மிளகு தூள்*1* மே.க
- நறுக்கிய வெங்காயம் *250* கிராம்
- தேங்காய்ப்பால் *4* டீ கப்
- தயிர் *3* மே.க
- கஜூ *50* கிராம்
- வெள்ளை கசகசா *1 1/2* தே.க
- தோல் நீக்கிய முழு பாதாம் *20*
- நெய் *1* மே.க
- தக்காளி *100* கிராம்
- பச்சை மிளகாய் *2*
- உப்பு தேவையான அளவு
- தாளிக்க பட்டை *1* துண்டு
- ஏலம் *8*
- இஞ்சி பூண்டு விழுது *1 1/2* மே.க
- பிரிஞ்சி *(bay leaf)* இலை *2*
- அன்னாசிப்பூ *(Star Anaise)* *2*
- ரம்பை,
- சேரை *(Lemon grass)* *2* துண்டு.
- கொஞ்சம் வைட் ஒயில் அல்லது நிறமில்லாத தே.எண்ணெய் வெட்டிய மல்லித் தழை,
- புதினா இலை *2* மே.க

முதலில் 25 கிராம் கஜூவை ஊறவிடவும். பச்சை மிளகாய், வெ.கசகசா, ஊறவைத்த கஜூவை அரைத் தெடுக்கவும்.

அனைத்து மசாலாவையும்,கொஞ்சம் இஞ்சி,பூண்டு விழுது, தயிர், உப்பு சேர்த்து கோழியை பிரட்டி வைக்கவும். அரிசியைக் கழுவி 4 சுண்டுக்கு 6 சுண்டு தண்ணீர், அளவாக உப்பிட்டு அடுப்பில் வைக்கவும். ஒரு சட்டியில் நெய், எண்ணெய் சேர்த்து வெங்காயத்தை பாதி பொரித்து (வெள்ளையாக) எடுக்கவும். ஏலம், பட்டை, அன்னாசிப்பூ, பிரிஞ்சி இலை, ரம்பை, சேரை சேர்த்து தாளிக்கவும். மீதியுள்ள இஞ்சி, பூண்டு விழுதை சேர்த்து லேசாக பொரிந்ததும்,தாளித்த பாதியை கொதிக்கும் அரிசியில் சேர்க்கவும்.

மிகுதியில், கோழியை சேர்த்து மூடி வேக விடவும். தக்காளித் துண்டுகள், மல்லி, புதினாசேர்க்கவும். வற்றி வரும்போது 2 கப் தேங்காய்ப் பாலூற்றி வற்ற விடவும். கொஞ்சம் வற்றியதும் அரைத்த கஜூ கலவையை சேர்த்துக் கிளறி நெருப்பை குறைக்கவும்.

சோற்றில் தண்ணீர் வற்றியதும் மிகுதி தேங்காய்ப் பாலை சேர்த்து புழுங்க விடவும்.

கடைசியாக சோற்றின் நடுவில் கறியை போட்டு மேலாக (பச்சை) கஜூ, பாதாம், பாதி பொரித்த வெங்காயம் சேர்த்தால் கமகமக்கும் வெண் பிரியாணி தயார். பரிமாறும் போது லேசாக கிளறி எடுத்தால் போதும்.

இதற்கு அச்சாறு, புதினா துவையல், பல வண்ண பெல் பெப்பர் சலட் பொருத்தமாக இருக்கும்.




# வெற்றிகரமாக நடைபெற்று முடிந்த மூதூர் மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழா கொண்டாட்டம்!





மூதூரின் மூத்த பாடசாலைகளுள் ஒன்றான தி/மூ/மூதூர் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) 1922.05.03ம் திகதி ஆரம்பிக்கப்பட்டு கடந்த 2022.05.03 ம் திகதி நூறு வருடங்களைப் பூர்த்தி செய்திருந்தது. அந்தவகையில்,

இப்பாடசாலையின் நூற்றாண்டினைக் கொண்டாடும் வகையில் நூற்றாண்டு விழா கடந்த ஒக்டோபர் மாதம் 28 ம் திகதி பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.தர்ஜூன் அவர்களின் தலைமையில் வெகு விமர்சையாக நடைபெற்று முடிந்தது. இவ் விழாவிற்கு முதன்மை அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாவுல்லா அவர்களும் சிறப்பு அதிதியாக மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் முனவ்றா நளீம் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் முன்னோட்ட நிகழ்வாக MCC'IAN JERSEY அறிமுக நிகழ்வும், 2023.10.21 ம் திகதி MCC'ian WALK நடைபவனியும் சிறப்பாக நடைபெற்றது.

அத்துடன் இப்பாடசாலையின் நூற்றாண்டு விழா முன்னோட்ட நிகழ்வுகளாக கடந்த காலங்களில் முன்னாள் அதிபர்களின் பதவிக் காலங்களிலிருந்து பல நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. அந்தவகையில் முன்னாள் அதிபர் ஏ.எச்.எம்.பஷீர் அவர்கள் பதவிக் காலத்தில் 2017 ம் ஆண்டு கல்வி மற்றும் வர்த்தகக் கண்காட்சி கிழக்கு மாகாணம் தழுவிய ரீதியில் வெற்றிகரமாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 2018 ம் ஆண்டு பழைய மாணவர்களை ஒன்று திரட்டும் நோக்கில் OBA ன் ஏற்பாட்டில் MCC'IAN BLAST பிரம்மாண்ட மென்பந்து கிரிக்கட்தொடர் நடாத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து முன்னாள் அதிபர் எஸ்.ஏ.முஹீர் அவர்கள் பதவிக்காலத்தில்

2021ம் ஆண்டு இரத்ததான நிகழ்வு மூதூர் தளவைத்தியசாலை அனுசரணையில் இடம் பெற்றது. மேலும் 2022ம் ஆண்டு OBA ன் ஏற்பாட்டில் இரண்டாம் முறையாக MCC'IAN BLAST கிரிக்கட் தொடர் சிறப் பாக இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து பாடசாலைக்காக சேவையாற்றி மறைந்த அதிபர், ஆசிரியர்களுக்கான துஆ பிரார்த்த னையும், நூற்றாண் டை முன்னிட்டான இப்தார் நிகழ்வும் நடைபெற்றது. பின்னர் 2022.05.03ம் திகதி நூற்றாண்டு தினத்தில் நூற்றாண்டு நினைவுப்படிகம் அங்குரார்ப் பணமும், திறப்பு விழா நிகழ்வும் நடை பெற்றது.






இவ்வாறாக தி/மூதூர் மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் வெகு சிறப்பாக நடைபெற்றதோடு இந்



நிகழ்வுகளில் பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், அரசியல் பிரமுகர்கள், சமூக பிரமுகர்கள் மற்றும் நலன் விரும்பிகள் என பலரும் பங்குபற்றி யிருந்தனர்.






இவ் நூற்றாண்டு விழா வெற்றிகரமாக நடைபெற்று முடிவதற்கு பாடசாலையின் அதிபர் தலைமையிலான முகாமைத்துவக் குழு, நூற்றாண்டுக் குழு, பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு,பழைய மாணவர் சங்கம், பழைய மாணவர்கள், தனவந்தர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் நலன் விரும்பிகள் என பலரும் தங்களது பூரண ஒத்துழைப்பு, உதவி களை வழங்கி அரும்பங்களிப்பும், அர்ப் பணிப்பும் செய்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.




**வி.எம்.எம்.ஹஸீன்**
ஊடக பொறுப்பாளர்
பழைய மாணவர் சங்கம்
தி/மூ/மூதூர் மத்திய கல்லூரி (தே/பா)

# ஊர்க்குருவி



**அன்று ஒரு சனிக்கிழமை மாலை**

நேரம் வழக்கம் போல் தாஹீர் சேரும் உமர் சேரும் சுலைமான் சேருடைய தோட்டத்துக்கு பொழுது போக்குக்காக வந்திருந்தார்கள். தோட்டத்து தென்றல் காற்று உடலை இதமாக வருடி நிற்க இன்பமாக உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

நாங்கள் ஊர்க்குருவியாக இருந்தாலும் நல்ல விடயம் எங்கு பேசப்பட்டாலும் ஓரமாக அங்குமிங்கும் துள்ளித்திரிந்து கேட்டுக்கொண்டிருப்போம். உமர் சேர் பேசத்தொடங்கினார்: அவர் பேசினால் வரிக்கன் பலாச்சுளையில் தேன் சொட்டு வது போல் அவ்வளவு சுவையாக இருக்கும். அவர் பேசிய சோகமான உண்மைச் சங்கதியை எனது பாணியில் உங்களுக்கு சுருக்கமாக சொல்கிறேன் கேளுங்க...

1987ம் ஆண்டு பயங்கரமான வன்முறை தலைவிரித்தாடிய பொல்லாத காலமது. இக்காலப் பகுதிதான் இந்த மூவருக்கும் ஆசிரியர் நியமனம் கிடைத்தது. உமர் சேரின் பிரதேசத்தில் வசிக்கின்ற அபூசாலி சாதிக் (A.S.Sathik) இவர் பல்கலைக்கழக பட்டம்பெற்று தற்பொழுது பிரபலமான வெளிநாடொன்றில் வேலைசெய்து உயர்ந்த சம்பளம் பெற்று வாழ்ந்து வருகிறார்.

ஊரிலுள்ள இவரது குடும்பம் பொருளாதாரத்திலும் கல்வியிலும் சற்று உயர்ந்தவர்கள்தான். அதே பிரதேசத்தில் மற்றுமொரு வீதியில் இன்னொரு அப்துல் சலாம் சாதிக் என்ற நபரும் வசித்து வருகிறார். இவர் 1987ம் ஆண்டு ஆசிரியர் பதவிக்கான போட்டிப் பரீட்சை எழுதிவிட்டு ஆசிரியர் நியமனத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். இவரது குடும்பத்தில் இவர் மட்டும்தான் படித்தவர். குடும்பச் சுமையும் வறுமையும் இவரைப் பாடாய்ப்படுத்தியது.

ஆசிரியர் போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான நியமனக் கடிதங்கள் தபால் நிலையம் ஊடாக உரியவர்களுக்கு விநியோகிக்கப்பட்டது. ஊரில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக தபால் விநியோகம் சீரற்றநிலையில் காணப்பட்டது. இப்படி இருக்க தபால் ஊழியர் அவசரத்தாலும் பீதியாலும் விலாசம் மாறியும் பெயர் மாறியும் தபால்களை விநியோகித்துச் சென்றுவிடுவார். இதனால் மக்கள் தபால்களை தபால் நிலையத்துக்கு சென்று கேட்டுப்பெற்றுக் கொள்வார்கள்.

இவ்வாறான நிலைமையில் அப்துல் சலாம் சாதிக் என்பவரின் நியமனக்கடிதம் அபூ சாலி சாதிக் என்பவரின் வீட்டுக்கு விநியோகிக்கப்பட்டுவிட்டது.

இந்த இருவரின் முதல் எழுத்துக்களுடனான பெயர் **A.S.Sathik** என்பதால்தான் இந்த தவறு நிகழ்ந்தது.அந்த வீட்டார் கடிதத்தை பிரித்துப் படித்துவிட்டு அதனை ஒரு பொருட்டாகக் கருதாமல் ஒரு மூலையில் தள்ளி விட்டார்கள்.

அப்துல் சலாம் சாதிக் தாம் ஆசிரியர் போட்டிப்பரீட்சையில் சித்தியெய்தும் கூட நியமனக்கடிதம் தனக்கு கிடைக்கவில்லையே என்ற ஆதங்கத்துடனும் மனக்கவலை யுடனும் தபால் நிலையத்துக்குச் சென்று விசாரித்துப்பார்த்தும் விடயம் சரிவரவில்லை. நண்பர்கள் அறிந்தவர்கள் அறியாதவர்கள் எல்லோரிடமும் தனது ஆதங்கம் வெளிப்படும் படியாக விசாரிக்கலானார். அதுவும் வெற்றியளிக்கவில்லை.

இப்படியே ஒரு மாதம் உருண்டோடியது. நியமனக்கடிதம் கிடைத்தவர்களெல்லாம் அந்தந்த பாடசாலைக்குச் சென்று கடமையேற்றுக் கொண்டனர்.ஆறு மாதங்களில் பின்னர் ஊர் நிலைமை ஓரளவு வழமைக்குத் திரும்பிய பிறகு அக்கடிதம் அந்த வீட்டார்களினால் மீள வாசிக்கப்பட்டு அவர்களால் செய்வதறியாது திகைத்துப் போய் கடிதத்தை உரியவரிடம் ஒப்படைக்கத் தவறியமையை பல வருடங்களாக மூடி மறைத்தாலும் இந்த ஈனச்செயல் அம்பலத்துக்கு வந்து விட்டதாகக் கூறினார் உமர் சேர். அப்துல் சலாம் சாதிக் எனது வகுப்பு நண்பனும் கூட க.பொ.த. உயர்தர கணிதப் பிரிவில் கற்று சிறப்புச் சித்தி பெற்றவர்.அவரும் அவருடைய புள்ள குட்டிகளும் இப்பொழுது வறுமையில் வாடி வதங்கிப்போய் இருப்பதை பார்க்கும் போது எனக்கு மிகவும் மனவேதனையா இருக்கு என்று கண்கள் இரண்டும் கண்ணீர் மல்க அழுதழுது கதையை முடித்தார் உமர் சேர். இக்கதையை கேட்டுக்கொண்டிருந்த தாஹீர் சேரும் சுலைமான் சேரும் அதிர்ந்து போனார்கள்.

இந்த சம்பவத்தை இவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. இக்கதையை கேட்டுக்கொண்டிருந்த எங்களுக்கே கண்கள் இரண்டும் கலங்கிவிட்டது. இப்படியும் சில மனிதர்கள் நம் ஊரில் வாழ்ந்துகொண்டுதான்இருக்கின்றார்கள்... மஃறிப் தொழுகைக்கு அதான் கேட்கும் நேரமாகிவிட்டதால் நாங்கள் எங்கள் கூட்டை நோக்கி பறந்து சென்றோம்...

**இச்சம்பவம் உண்மை உண்மை உண்மை. பெயர்கள் யாவும் கற்பனை...**


முத்திதழ் காலாண்டு இதழுக்கான ஆக்கங்களை அனுப்பிவைக்க நீங்களும் விரும்பினால்

**0717891887**

என்ற WHATSAPP என்னுக்கு அனுப்பி வையுங்கள்




## சமாதான விழிப்புணர்வு ஓவியம்



மூதூர் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் மூதூர் வலயக்கல்வி அலுவலக பிரிவிற்குட் பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடை யிலான "சமாதான விழிப்புணர்வு ஓவியப் போட்டி" கடந்த 11.11.2023 ஆம் திகதி அல்ஹிதாயா பாடசாலையில் இடம்பெற்றது. குறித்த ஓவியப்போட்டியில் 85 மாணவர்கள் கலந்து கொண்டதோடு பாடசாலை ஆசிரியர் களும் கலந்து சிறப்பித்தனர்.


## இலவச மருத்துவ முகாம்

மூதூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக் கென மூதூர் லயன்ஸ் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நீரிழிவு, இரத்த அலுத்தப் பரிசோதனைகள் முற்றிலும் இலவசமான முறையில் கடந்த 2023/11/116 மூதூர் பிரதேச செயலகத்தில் வெற்றிகரமாக இடம்பெற்றது. இதன்போது வைத்தியர் N.M.Nifras அவர்களி னால் நீரிழிவு ஆலோசனை வழங்கப்பட்ட தோடு வைத்தியர் N.M.Gazzali அவர்களினால் ஆரோக்கிய மருத்துவ வழிகாட்டலும் நிகழ்த் தப்பட்டது. இம்மருத்துவ முகாமில் 135 க்கு மேற்பட்ட அரச அலுவலகர்கள் பங்குபற்றி யமை குறிப்பிடத்தக்கது.



## தேசிய சாகித்திய விருது






கொடகே நிறுவனத்தின் 25 ஆம் ஆண்டு வெள்ளி விழாவில் கொடகே நிறுவன சிறந்த நாவலுக்கான தேசிய சாகித்திய விருது எழுத்தாளர் **ஏ.எஸ்.உபைதுல்லா** அவர்கள் எழுதிய **"வேரோகிப்போன மனிதர்கள்"** என்ற நாவல் நூலுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. அந்தவகையில் நூலாசிரியரின் இந்நூல் முதலாவது நாவல் நூல் என்பதோடு இதற்கு முன்னர் இரண்டு சிறுகதைத் தொகுப்பு நூல்களையும் வெளியீடு செய்துள்ளமை சுட்டிக் காட்ட வேண்டிய அம்சமாகும்.

## இரத்ததான முகாம்



யுனைடட் விளையாட்டு கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான நிகழ்வு கடந்த ஞாயிறு காலை 9.00 மணி தொடக்கம் 13.00 மணி வரை நெய்தல் நகர் ஹிழிறு ஜும்ஆ மஸ்ஜித் வளாகத்தில் நடைபெற்றது. பொதுமக்கள் பலர் ஆர்வத்துடன் கலந்து சிறப்பித்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்ததோடு இளைஞர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்

## கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

மூதூர் அரபா நகர் பாலத்தை மீள் நிர்மாணித்து தரக்கோரி கடந்த 26.08.2023 காலை 10.00 மணி அளவில் கிராமவாசிகளினால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்போது பாடசாலை மாணவர் கள், வயோதிபர்கள் மற்றும் அவசர சிகிச்சை தேவைப்படுவோர் உள்ளிட்ட பலர் இந்த பாலத்தை அடிக்கடி பயன்படுத்தி வருவதோடு கட்டைபறிச்சான் கிழக்கு பிரதேசத்தை சேர்ந்த நான்கு கிராமங்களை ஒன்றிணைக்கும் பிரதான பாதையாக இந்த பாலம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



## கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்



தோப்பூரில் மதுபானசாலை திறப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை கடந்த வெள்ளிக் கிழமை 09.09.2023 ஏற்பாடு செய்தனர். இதன் போது தோப்பூர்-கூர்கண்டம் பகுதியில் தனியார் மதுபானசாலை அமைப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வரும் நிலையில் மதுபானசாலைக்கான அனுமதியை வழங்க வேண்டாமென கண்டனம் தெரிவித்து அமைதியான கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## கவனயீர்ப்பு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

பலஸ்தீன் மக்களுக்கு நிகழும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் அம்மக்களுக்கு ஆதரவாகவும் கடந்த 20.10.2023 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையைத் தொடர்து மூதூரில் ஒழுங்கு செய்யப்பட்ட விழிப்புணர்வு ஆர்ப்பாட்டம் (புளியடி) மூதூர் மணிக்கூடு கோபுர சந்தியில் இருந்து மூதூர் பிரதான வீதி வழியாக சென்று மூதூர் எரிபொருள் நிலையத்தில் நிறைவு பெற்றது. இவ்வார்ப்பாட்டத்தில் பெருந்திரளான பொது மக்கள், இளைஞர்கள் கலந்துகொண்டமையை அவதானிக்கக்கிடைத்தது.



இம்முறை வெளியாகியுள்ள 2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரணதர பரீட்சை முடிவுகளின் பிரகாரம்; மூதூர் வலயத்தில் 34 க.பொ.த சாதாரணதர பாடசாலைகளில் இருந்து 1220 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி 795 (65%) மாணவர்கள் 3C,3S யும் 909 (75%) மாணவர்கள் 3C,2S மேல் சித்தியும் அடைந்து G.C.E (A/L) கற்பதற்கு மூதூர் வலயத்தில் தகுதி பெற்றுள்ளனர்.

இப்பெறுப்பேற்றின் அடிப்படையில்; உயர்தரம் கற்பதற்கான அடிப்படை தகமை பெற்றுள்ள மாணவர்களில் கணிதம் மற்றும் தமிழ் மொழி உட்பட சித்தி சதவீதம் இம்முறை மூதூர் வலயத்தில் 77% ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

**T/ANNAHAR GIRLS MAHA VIDYALAYA -8**
**T/MUTHUR MUSLIM LADIES COLLEGE -4**
**T/KILIVEDDY MAHA VIDYALAYA –2**
**T/AL-HAMBRA CENTRAL COLLEGE –1**
**T/ETM HINDU COLLGE–1**
**T/MU/FATHIMA MUSLIM LADIES COL –1**
**T/MUTUR MADHYA MAHA VID –1**
**T/PADDITHIDAL GOVT. TAMIL MIXED –1**
**T/SAMPUR MAHA VIDYALAYA –1**


மேலும் பாடரீதியாக பாடசாலைகளின் தரப்படுத்தளில் T/Mu/Lingapuram Saraswathi Viddiyalaya இம்முறை 100% சித்தியை வெளிக்காட்டி வரலாற்று சாதனையும் நிகழ்த்தியுள்ளமை விசேட அம்சாமாகும். மூதூர் வலயக்கல்வி அலுவலக பிரிவிற்குட்பட்ட 34 பாடசாலைகளில் 20 மாணவர்கள் "9A" சிறப்பு சித்தியை பெற்று சாதனை படைத்துள்ளனர். இதேவேளை 28 மாணவர்கள் 9W Fail உம் பெற்றுள்ளமை இங்கே சுட்டிக்காட்டத்தக்கது.

## மூதூர் வலயம் 2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரணதர பரீட்சை பெறுபேற்றின் பகுப்பாய்வு









# அதிபர் சேவை தரம் III க்கு பதவியேற்பு மூதூர் பிரதேச புதிய அதிபர்கள்

மூதூர் வலயக்கல்வி அலுவலக பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் மிக நீண்ட வெற்றிடமாக நிலவிய அதிபர் சேவை தரம்கொண்ட அதிபர்கள் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் வகையில் அண்மையில் உள்ளீர்ப்பு செய்யப்பட்ட இலங்கை அதிபர் சேவைத் தரம்-*III* க்கு மூதூரில் இருந்து *19* அதிபர்கள் இணைப்பு செய்யப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. குறித்த நியமனங்கள் கடந்த *6.11.2023* ஆம் திகதி கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமானர் அவர்களினால் மேற்படி புதிய நியமனம் பெற்ற அதிபர் சேவைத் தரம்-*III*க்கான அதிபர்களுக்கு நியமனம் அளிக்கப்பட்டது. அந்தவகையில் மூதூர் வலயக்கல்வி பிரிவில் காணப்படும் *89* பாடசாலைகளில் சுமார் *45*க்கு மேற்பட்ட பாடசாலைகளுக்கு அதிபர் வெற்றிடம் நிலவுகின்றமை இவ்விடத்தில் சுட்டிக்காட்டவேண்டியதாகும். இந்த புதிய நியமானத்தினூடாக சிறந்த சேவைகளையும், கல்விசார் வேலைத்திட்டங் களையும் அமிழ்ப்படுத்துவதன் மூலமாக எதிர்காலத்தில் மூதூர் வலயக்கல்வி அலுவலக பிரிவுக்குட்பட்ட பாடசாலைகள் வளர்ச்சி காணும் என்பதில் ஐயமில்லை.



Mr. S.Niyas — T/M/AL HAMBRA CENTRAL COLLEGE
Mr. Rafeek Sarraj — ZONAL EDUCATION OFFICE
Mr. M.M.Nawfeek — T/M/AL HAMBRA CENTRAL COLLEGE
Mrs. Jazeela M.R — T/MU/SATHAM VIDDIYALAYA
Mrs. Janeesa M.I — T/MU/AN-NAHAR GIRLS MAHA VID
Mr. A.M.Janoos — T/MU/AL-MINA MAHA VIDDIYALAYA
Mr. Jayakanthan — T/MU/SAMPOOR MAHA VIDDIYALAYA




Mrs. Saheema N — T/M/SACRED HEART VIDYALAYAM
Mr. A.J.M.Sabry — T/MU/AL-HUSAINIYA VIDDIYALAYA
Mr. S.Nadesapillai — T/M/MEENADCHIYAMMAN VIDDIY
Mr. S.Kaneshan — T/MU/ETM HINDU COLLEGE
Mr. M.S.RANEES — T/MU/SAMPOOR MAHA VIDDIYALAYA
Mr. S.A.Fowmy — ZONAL EDUCATION OFFICE
Mr. F.Nimsath — T/MU/AN-NAHAR GIRLDS MAHA V



Mr. S.M.Sukri — T/M/AL-MANAR VIDDIYALAYA
Mr. A.H.Imran — T/KI/KINNIYA CENTRAL COLLEGE
Mr. M.W.M.Salmy — T/KI/KURINCHAKERNY GIRLS M.V

**"புதிய நியமனம் பெற்றுள்ள எமது ஊரைச்சேர்ந்த அதிபர்களுக்கு எமது முத்திதழ் சார்பாக வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் அடைகிறோம்"**








# Quality Mart

**Modern Mens Wear & Kids Wear**
**Wedding Dress Collections**

- EMERALD
- LAROUSSE
- COSMATICS
- MOOSE
- VANTAGE
- KIDSWARE
- BABAYHUG

**Contact**
077 15 444 88
075 60 26 304

**Batticaloa Road**
**Periyapalam Mutur**



Pearl Grand

# PEARL GRAND

*Reception Hall*

## ENJOY YOUR SPECIAL OCCASIONS WITH US

WEDDING | WALEEMA | BIRTHDAY PARTIES | SPECIAL EVENTS | FAMILY FUNCTIONS

- CAN ACCOMMODATE MORE THAN 1000 PERSONS
- CAN SEPARATE GENTS AND LADIES
- SEPARATE WASHROOMS FOR GENTS AND LADIES
- BUDGET FRIENDLY
- TWO FLOORS
- EASY PARKING AREA
- LIVE VIDEO SHOOTING & PHOTOGRAPHY
- ARRANGEMENTS WITH REFRESHMENT & FOOD PACKAGES
- ARRANGEMENTS DJ SETUP
- DTS SOUND & ANNOUNCEMENT SYSTEM
- PROJECTOR SYSTEM
- FULL COMFORTABLE PLACE
- CUSTOMIZABLE PACKAGES AND ARRANGEMENTS




94 77154 4488 | pearlgrand@gmail.com | pearlgrand.com | Knox Road Mutur

CUSTOMER SATISFACTION 100% GUARANTEE

# MUTUR JMI PUBLICATION

jmi MUTUR

## Offset Printing & Photocopy , Print Services

**MINIMUM QUANTITY 100**

40% OFF

***Island Wide Free Delivery Available***

Book Binding | Teachers Guide | Past Papers | Certificate | Assignment | Syllabus Notes & Books | Tution Class Tutes | Offset Work | Photo Printing | Album Printing | Advertisement & Leaflet |

FREE DELIVERY

Book Publication & Printing Center




### Offset Printing

- Four Color to One Color
- 70 - 250 GSM Papers
- A5, A4, A3, Offset Printing
- Photocopy & Duplo
- Typing & Layouts
- Cover Design
- Visiting Card

### Book Binding

- Perfect & Hard Binding
- Book Publication
- Glossy & Mett Lamination
- 50 - 120 Gsm Papers
- Magazine, Book, Project
- Publications Sponsorship
- Instalment Payment Available

### Color Printing

- Four Color (Inject & Laser)
- 70 - 300 GSM Board & Papers
- A5, A4, A3, B5, Color Printing
- Certificate & Photos
- Layouts & Designing
- Visiting Cards, Invitation and All Types of Wedding Cards
- Art Paper, Photo Board, Sticker, Ivory Board, and Etc

**Our Office**
Bazar Mosque Road
Mutur - 04, 31200
Trincomalee, Sri Lanka

**Mutur JMI**
Contact Now
077 1020030
0262238593

**More Information**
www.mutur-jmi.com
muturjmi@gmail.com
https://g.co/kgs/wBo6ob